# நங்கை

மாதர் மாத இதழ்




வளையல்கள் உடைந்தாலும்
தூக்குங்கள் கரங்களை
விலங்குகள் நொருங்கட்டும்...

சர்வதேச மகளிர் தின சிறப்பிதழ்

மார்ச் & ஏப்ரல் 1990

10/-

NANGAI WOMEN'S MAGAZINE

இன்றைய சூழ்நிலைக்கேற்ற பெண்களுக்குத்
தேவை என நீங்கள் கருதும் அம்சங்கள்;
கதை, கட்டுரை, கவிதைகள், கருத்துரைகள்
வரவேற்கப்படுகின்றன.

அச்சுப்பதிவு:
நியூ ஈரா பப்ளிக்கேசன்
யாழ்ப்பாணம்

அட்டைப்படம்:
சர்வதேச மகளிர் தினம்
ஓவியம்
— லங்கா —

Nangai — Women's Monthly Magazine,
*Editor*: Mrs. Saroja Sivachandran, B. A, Hons (Cey.), M. A. (Jaf)
*Published by*, Centre for Women and development,
07, Ratnam Lane, off. K. K. S. Road, Vannarpannai,
Jaffna, Sri Lanka.

தனிப் பிரதி: ரூபா 10-00
ஆண்டு சந்தா: 130-00
வெளிநாடு, தனிப்பிரதி ரூபா 50-00
ஆண்டு சந்தா: 550 00

# பெண்கள் எழுச்சி புழுதி படிந்த கிராம ஒழுங்கைகளுக்குள்ளேயும் நிகழட்டும்!

உலக மனித சமுகத்தின் ஆரோக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டோர் மனித சமுகத்தின் பாதிப்பேர் — பெண்கள்; காலா காலமாக இன்னல்களுக்குட்பட்டு — அடக்கு முறைக்குட்பட்டுவரும் துயர வரலாற்றைக்கண்டு துன்புற்றே வந்தனர் உலகில் வாழ்ந்த சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் பெண் விடுதலை பற்றி அவ்வப்போது குரல் கொடுத்தே வந்துள்ளனர். இது மேலைத்தேசத்தில் மட்டும் கேட்ட குரல் அன்று. மேலைத்தேசத்திலே கேட்பதற்கு முன்னரேயே கீழைத் தேசங்களில் இக் குரல்களைக் கேட்க முடிந்தது தமிழர் வாழ்வில் சங்ககாலத்திலே பெண்கள் சம உரிமையுடன் வாழ்ந்ததாக இலக்கியத் தகவல்கள் நிறையவே உண்டு. சமகாலத்தில் தமிழிலே பெண் விடுதலைக்காகப் பாரதியின் குரல் உரத்து ஒலித்தது.

பெண்விடுதலைக்காக சம காலங்களில் சர்வதேச மட்டத்தில் கொண்ட அக்கறையின் விளைவாக 1975 ஆம் ஆண்டு மெக்சிக்கோவில் இடம் பெற்ற மாநாட்டில் சர்வதேச பெண்கள் தசாப்தம் பிரகடனப்படுத்தப்பட்டது. இவற்றின் நோக்கம் உலகில் பரந்துள்ள நாடுகள் யாவும் பெண்களின் அடிப்படை உரிமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி பெண்களின் சமூக பொருளாதார மேம்பாடுகளில் ஆழ்ந்த அக்கறை கொள்ளவேண்டும் என்பதே. பல நாடுகள் பெண் விடுதலை தொடர்பாக நிறுவனரீதியான அமைப்பியல் மாற்றங்களை மேற்கொண்டன. இவ்வகையில் இலங்கையில் 1978 இல் பெண்கள் பணியகம் நிறுவப்பட்டதையும், 1983 இல் பெண்கள் விவகாரத்திற்கென ஓர் அமைச்சு நிறுவப்பட்டமையையும் கூறலாம்.

வருடா வருடம் பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதோடு எமது கடமை முடிந்து விட்டதா? ஏன் இத்தினத்தைக் கொண்டாட விழைகின்றோம்? இதன் உண்மையான அர்த்தம் என்ன? இது பற்றி நாம் சிறிது ஆழமாகவே சிந்திக்க வேண்டும்.

பெண் விடுதலை தொடர்பாக சிந்திப்போர் ஊக்கம் பெறவும், நாடுதழுவிய ரீதியில் பெண்களின் பிரச்சினைகள் பரவலாவதற்கும் பெண்கள் தினக் கொண்டாட்டங்கள் உதவி புரியலாம். எனினும் பெண் விடுதலை தொடர்பாக மேடைகளில் வெறும் கோஷங்களை எழுப்புவதை விடுத்து ஆக்க பூர்வமான பணிகளில் நாம் ஈடுபட வேண்டும். வருடத்திற்கு ஒரு தினமல்ல, வருடம் முழுவதும் பெண் விடுதலை தொடர்பான பிரஞ்ஞை உள்ளவர்களாக நாம் இயங்க வேண்டும்

பெண்களைச் சுற்றிப் பிணைக்கப்பட்டுள்ள. அவளுக்கு – அவளது உள்ளத்திற்கும் உடலுக்கும் துயரங்களை விளைவிக்கின்ற முட்கம்பிகள் அறுத்தெறியப்பட வேண்டும். பொருளாதாரத்திற்கு, பாதுகாப்பிற்கு ஏனையோரைச் சார்ந்திருக்கும் நிலையினை மாற்றியமைத்திட. பொருளாதாரத்தினை உயர்த்துவதற்குரிய செயற்திட்டங்கள், உருவாக்கப்படவேண்டும். பாதுகாப்பிற்குரிய சட்டங்கள் வேண்டும் "அடிப்படை மாற்றங்கள் தேவை" என்ற மந்திர கோஷங்களை விடுத்து பெண்களின் அடிப்படை மாற்றத்தை அடிமட்டங்களிலிருந்து உருவாக்க அடிமட்ட பெண்களை ஒன்று திரட்ட ஆயத்தம் செய்வோம். புழுதிபடிந்த கிராம ஒழுங்கைகளினூடே நடந்து கிராமங்களுக்குச் சென்று அங்கே அடிமட்டப் பெண்களைக் கண்டு பேசி பிரச்சினைகளை உணர்ந்து. அப்பெண்களின் எழுச்சிக்கு, விழிப்புக்கு வழிகாண்போம் பெண்கள் எழுச்சி, விழிப்புணர்வு எல்லாமே அடிமட்டத்திலிருந்து உதயமாக வேண்டும். எமது மக்களின் 80 வீதத்தினர் வாழும் கிராமங்களில் பெண்கள் எழுச்சியைத் தோற்றுவித்தால்தான் அது உண்மையான எழுச்சியாகப் பரிணமிக்கும் பலமிக்க சக்தியாக உருவெடுக்கும். பெண்நிலைவாதிகளே கிராமங்களுக்குச் செல்வோம் வாரீர்.

சர்வதேச மகளிர் தினம்

# சாதனைகளும், எதிர்பார்ப்புகளும்.

— சரோஜா சிவசந்திரன்

பெண்களே! கோஷங்களும் தீர்மானங்களும் எம்மை வெகுதூரத்திற்கு எடுத்துச் செல்லப்போவதில்லை. இன்று மகளிர் அபிவிருத்தி தொடர்பாக எத்தனை சிபார்சுகள், தீர்மானங்கள் எடுக்கப்படடுவிட்டன. எத்தனை சர்வதேச மா நா டு க ள்? அபிவிருத்தியில் பெண்கள் ஒன்றிணைப்பு என எத்தனை திட்ட நடைமுறைகள்? இவை எல்லாம் எம்மை எங்கு அழைத்துச் செல்கின்றன? பெண்களுக்கு அபிவிருத்தி எங்கே இடம்பெற்றுள்ளது!

1975 ஆம் ஆண்டில் மெக்சிக்கோ நகரில் இடம்பெற்ற மாநாட்டில் ஐ. நா. மகளிர் தசாப்தத்தின் குறிக்கோளாக சமத்துவம், சமாதானம் அபிவிருத்தி என்பன ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கேற்ப உலக செயற் திட்டம்' உருவாக்கப்பட்டது. இம் மாநாட்டில் 133 நாடுகளைச் சார்ந்த பிரதிநிதிகள், மேலும் 7 அரசியல் மட்ட சபைகளிலிருந்தும் பங்குபற்றுநர், 21 ஐ நா அமைப்பு சிறப்பு முகவர் நிலையங்கள், 8 விடுதலை இயக்கங்கள், 114 அரசு சார்பற்ற அமைப்புக்களிலிருந்து பங்குபற்றுனர் கலந்துகொண்டனர். இம் மாநாட்டில் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஓர் செயற் திடடம் உருவாக்கப்படட்டதுடன் பெண்கள் சமத்துவதத்திற்கான மெக்சிக்கோ பிரகடனம் ஒன்றும், பெண்கள் அந்தஸ்து, பிரச்சினைகள் தொடர்பாக 34 சிபார்சுகளும் மேற்கொள்ளப்பட்டன. 1975 – 19*6 காலப்பகுதியினை பெண்கள் அபிவிருததிக்கான தசாப்தமாக பிரகடனபபடுத்தி நாடுகளும் வெகுசனதொடர்பு சாதனங்கள் மற்றும் ஆண் – பெண் இருபாலாரும் பெண்கள் முன்னேற்றத்திற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்பற்றியும் மாநாடு வரையறை ஒன்றை வகுத்தது. இவை யாவும் பெண்களை கீழ்மட்ட நிலைக்கு தள்ளியுள்ள குறைவிருத்தி, சமூக பொருளாதார அமைப்புக்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முகமாக தேசிய சர்வதேசிய செயற்பாடுகளை ஊக்குவித்து பெண்களின் சமத்துவமான நிலையினை பெறுவதினை இலக்காக கொண்டமைந்தன.

1975, மெச்சிக்கோ பிரகடனமானது, வளர்நதுவரும் 74 நாடுகளினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இப் பிரகடனத்தின்படி, ஆணும் பெண்ணும் மதிபபு, சுதந்திரம், நீதி என்பவற்றை உணர்த்த ஓர் மனித சமுதாயத்தை உருவாக்குவதற்கு சகல நாடுகளும், மக்களும் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

மகாநாட்டில் எடுக்கப்பட்ட சிபார்சுகள், பெண்களின் உரிமைகள், சந்தர்ப்பங்களை மேம்படுத்தி, அபிவிருததி செயற்பாட்டினை விரிவுபடுத்தி முன்னேற்றத்திற்கான வழிவகைகளுக்கு பல ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

ஐ. நா. உலக செயற்திட்டமானது, முதலில் ஐ நா. செயலகத்தினால் தயாரிக்கப்பட்டது. பின்னர் மாநாட்டின் 23 அங்கத்துவ ஆலோசனை குழுவின் சிபார்சிற்கிணங்க பல புதிய திட்டங்களை உள்ளடக்கிய மீள் திட்டமொன்றினை மாநாட்டின முன் தயாரித்

தது. இத் திட்டம் சிறிய மாற்றங்களுடன் ஏகமனதாக ஏற்கப்பட்டது. இத் திட்டம் 1975 – 1985 காலப்பகுதிக்குள் பின் வருவன வற்றுள் முன்னேற்றம் காணவேண்டும் என நாடுகட்கு ஆலோசனை வழங்கியது.

- பெண்கள் படிப்பறிவில் முன்னேற்றம்.
- தொழிற்பயிற்சி நவீன பண்ணை முறைகளில் விரிவாக்கம்.
- ஆரம்ப கல்வியில் முன்னேற்றம்.
- பெண்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிப்பு.
- கிராம மற்றும் பகுதிகளில் சேவை வசதிகளை அதிகரித்தல்.
- சமாதான அரசியல் பங்களிப்பு, சமமான வேலைவாய்ப்பு, சம சம்பளம் போன்றவற்றிற்கான சட்ட ஆக்கங்களின் அவசியம்.
- சகல மட்டத்திலும் கொள்கைத் திட்டங்கள் வகுப்பதில் பெண்கள் பங்கினை ஊக்குவித்தல்.
- சுகாதாரக் கல்வி வசதி, போஷாக்கு, குடும்பக் கல்வி, குடும்பத்திட்ட மற்றும் சமூக நல சேவைகளில் வசதிகளைப் பெருக்குதல்.
- பெண்கள் ஆற்றும் வீட்டுப்பணிகளில் பொருளாதார பெறுமதியினை மதித்தல்.
- பெண்களுக்கான முறைகள், முறைசாரா கல்வி வசதிகளை பெருக்குவதுடன், மீள் மதிப்பீடு செய்தல்.
- தொழிலாளர் அமைப்புக்கள், கல்வி பொருளாதார மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் பெண் அமைப்புக்களை ஊக்குவித்தல்.
- நவீன கிராமிய தொழில் நுட்பம், குடிசைக் கைத்தொழில், பாலர் கல்வி நிலையங்கள், நேரத்தைக் குறைக்கும் உபகரணங்களின் அறிமுகம், இதன்மூலம் பெண்கள் சமூக, தேசிய சர்வதேசிய மட்டத்தில் முழு பங்களிப்பை செலுத்த உதவுதல்.
- அரசாங்க மட்டத்தில் பெண்கள் தமது முழுமையான இணைப்பினை செலுத்துதற்கான சம வாய்ப்புக்களைப் பெற முயற்சித்தல்,
- வெகுசன தொடர்பு சாதனங்கள் பெண்களை இழிவாக, பிறபோக்கான நிலைகளில் படம் பிடித்துக் காட்டும் நிலைகளில் மாற்றம் ஏற்படுத்துவதுடன், பழைமையான மரபுகளில் மனமாற்றத்தினை ஏற்படுத்துதல்.
- 1980 இல் ஐ. நா. வின் இரண்டாவது மகாநாடு இடம் பெறுவதற்கு முன்னர் மாநாட்டில் பங்குபற்றிய செயற்குழுக்கள் தமது அங்கத்தவர்களை ஆண் பெண் விகிதாசாரம் நியாயமானளவு சமப்படுத்தப்படுமளவில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதனை உறுதி செய்யவேண்டும் எனவும் இத் திட்டம் நாடுகளை கேட்டுள்ளது.
- பிரதேச அபிவிருத்தி வங்கிகள், வங்கி முகவர் நிலையங்கள் போன்றன அபிவிருத்தியில் பெண்களை இணைக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும் எனவும், இத்திட்டம் கோரிக்கை விடுத்துள்ளது.

**மெச்சிக்கோ பிரகடனமானது:**

30 விதிகளின் அடிப்படையில் பெண்கள் உரிமைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான தேவைகளுடன், இவ்விலக்குகளைப் பொருளாதார, அரசியல் குறிக்கோள்களுடன் இணைப்பது தொடர்பாக விளங்குகின்றது.

சமமற்ற தன்மை தொடர்பான பிரச்சினை இன்று பெருமளவிலான பெண்களைத் தாக்கத்திற்குள்ளாக்குகின்றது. இப்பிரச்சினை குணவிருத்தி பொருளாதாரத்தினுல் உருவாகிய பொருத்தமற்ற உள்நாட்டு அமைபபுக்களின் விளைவாக ஏற்படுவது மட்டுமன்றி உலக பொருளாதார ஒழுங்கினையும் பொறுத்து அமைகின்றது என இப்பிரகடனம் கூறுகின்றது.

மனித உடலானது, ஆண் பெண் என்ற வேறுபாடின்றி மனித மேம்பட்டிற்குரிய மதிப்பு சுதந்திரத்தை வழங்க வேண்டிய அடிப்படை மூலமாக உள்ளது. ஆகவே, ஒவ்வொரு குடும்பமும் தமது பிள்ளைகள் பற்றி தீர்மானிக்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

பெண்களை அபிவிருத்தியில் இணைத்தல், சுகாதாரம், கல்வி வசதிகள், அரசியல் சமூக பங்களிப்பு, ஐ. நாடுகளும் பெண்களும், பாரபட்சம் காட்டுதலுக்கெதிரான நடவடிக்கைகள், சமாதானம், ஆயுதக்களைவு, பலஸ்தீனம், சில்லி, வியட்னும் போன்ற நாடுகள் தொடர்பானதுமான 34 சிபார்சுகளை இப்பிரகடனம் ஏற்படுத்தியது இத் தீர்மானங்களின்படி சகல பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பெண்கள் ஒன்றிணைப்பின் அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இம் மாகாநாடு பெண்களின் வாலாற்றில் ஓர் திருப்பு முனையாக அமைகின்றது. 133 நாடுகளிலிருந்து சுமார் 891 பெண்கள் பங்கு பற்றியமை ஐ. நா. நிகழ்ச்சிகளில் முன் எப்போதும் இடம பெருத ஓர் நிகழ்ச்சியாகும். மற்றும், குறிப்பிடத்தக்க இன்னொரு நிகழ்ச்சியாக, இம்மாநாடு பெருமளவில் வெகுசன தொடர்புச் சாதனங்களில் இடம் பெற்றதுடன் 1500 வெகுசன தொடர்பியலாளர்கள் இந் நிகழ்ச்சிகளை பிரசுரித்தனர். மேலும் சர்வதேசிய சமுதாயம் பெண்கள் முன்னேற்றத்திற்காக ஏற்படுத்திய மிகச் சிரமமான ஓர் முயற்சி இது என பலரால் பாராட்டைப் பெற்றது. ஆனல் இம் முயற்சி பெண்கள் முன்னேற்றத்திற்கான ஆரம்ப முயற்சியே. இங்கு எற்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகள், சிபாரசுகள் யாவும் எம்மட்டத்தில் வெற்றியளிததுள்ளன என்பது 1985 ஆம் ஆண்டில் நைரோபியில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் வெளிக்காட்டப்பட்டது.

1985, ஜூலை 13 — 26 வரை நைரோபியில், பெண்களுக்கான ஐ நா. தசாப்தத்தினை மதிப்பீடு செய்வதற்கான ஓர் மாநாடு இடம் பெற்றது. இம்மாநாட்டில் சுமார் 16,000 பெண்கள் பங்குபற்றியதுடன் சமத்துவம், சமாதானம், அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தனர். மெக்சிக்கோவிற்கும் நைரோபிக்குமிடையிலான பத்தாண்டு காலப்பகுதியில் பெண்களின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளைத் தூண்டக்கூடிய பல நிகழ்வுகள் இடம் பெற்றுள்ள போதிலும், எதிர்பார்ப்புக்கள், பெரியளவில் இடம் பெறவில்லை என்றே கூறலாம். நைரோபி பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற நைரோபி மாநாட்டில் சுமார் 100 தொழிற்கூடங்கள், கலந்துரையாடல்கள் ஒரு நாளில் இடம் பெற்றது ஓர் சிக்கலான நிகழ்ச்சியாகும். மாநாட்டில். பெண் அமைப்புக்கள், ஆண் பலாத்காரம், கற்பழிப்பு, விபச்சாரம், குடும்ப வாழ்க்கை, கருச்சிதைவு, நிறப்பாகுபாடு அபிவிருத்திக் கொள்கைகள், பெண் அகதிகள், சமாதானம் போன்ற பல விடயங்களைப் பற்றி மேலோட்டமாகவே ஆராயப்பட்டது. மேலும் மேல் நாடுகளிலிருந்து பங்குபற்றிய 2000 திற்கும் மேற்பட்ட பெண்கள், தமது சிந்தனைகள் கருத்தோட்டங்களினல் மாநாட்டினை தமக்கும் சார்பாக ஆக்கிக் கொண்டனர்.

இம் மாநாட்டில் கலந்துகொண்ட பல பெண்கள் ஆயுதப் போராட்டங்களின் தாக்கங்களை அனுபவித்தவர்களாக காணப்பட்டனர். இதனல் இம் மாநாட்டில் பெண்களும் அரசியற் பிரச்சனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆகவே பெண்நிலைவாதம் நிகழும் பிரச்சனைகளிருந்து ஒதுக்கிவைக்கப் படக் கூடிய தொன்றல்ல, சமூகத்தின் நிகழ்வுகளோடு ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய ஒன்று என்பதனை இம் மகாநாடு எமக்கு வலியுறுத்தியுள்ளது. பெண்களுக்கான தசாப்தம், பெண்களின் அந்தஸ்து தொடர்பாக ஓர் விழிப்புணர்சியினை எற்படுத்தியுள்ளது. மகளிர் இயக்கங்கள் பெண்ணுரிமை கழகங்கள், மகளிர் நிலையங்கள் உலகெங்கும் தோன்றியுள்ளன. வளர்முக நாடுகள் குறிப்பாக பெண்கள் அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்துவதாக காட்டிக் கொள்கின்றன. இதனைத தொடர்ந்து வரும் வருடங்கள் பெண்

கள் விழிப்புணர்வு, பெண் சமத்துவம், பெண் விடுதலைக்கான விடா முயற்சி என்பவற்றை தொடர்ந்து எடுத்துச் செல்லக் கூடிய முனைப் பைப் பெறுதல் வேண்டும்.

இலங்கையில், பெண்கள் தொடர்பாக விழிப்புணர்ச்சி 70 பதுகளிலிருந்து ஆரம்பமாகின்றதெனலாம், மெச்சிக்கோ மாநாட்டில் இலங்கை பங்குபற்றியமை, அரசு சார்பற்ற பெண்கள் அமைப்புகள், என்பவற்றின் விளைவாக பெண்கள் தொடர்பான பிரச்சனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. இலங்கையின் மகளிர் பணியகம் ஆரம்பிக்கப் பட்டதனைத் தொடர்ந்து மகளிர் விவகாரங்களில் ஆர்வமும், அக்கறையும் மேலோங்கின.

ஆயினும் திட்ட அமுலாக்கல் மட்டத்தில் பெண்கள் ஒன்றிணைப்பிற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் படவில்லை. இவை மேலும் ஆண் பெண் பாகுபாடுகளில் வேறுபாடான மாற்றத்தின ஏற்படுத்தியதென்றே தோன்றுகின்றது. அபிவிருத்தி தொடர்பாக முன்வைக்கப்பட்ட பல திட்டங்களில் பெண்களின் அபிவிருத்தி தேவைகள் இணைக்கப் படவில்லை.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பணியகம், பெண்களின் முன்னேற்றத்தை ஊக்குவித்து, பெண்களின் நலன்களைப் பாதுகாக்கும் ஓர் சயலகமாக விளங்க வேண்டும் எனவும், பெண்களின அபிவிருத்தி நோக்கை இலக்காகக் கொண்ட செயற் திட்டங்களை இனம் கண்டு ஆய்வு முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப் பட்டது. ஆனல் இப் பணியகத்தின் செயற் திட்டங்கள், அரசு சார் கொள்கைகட்கு சார்பானதாக அமைந்ததாகவும், அரச திட்டங்களை நிறைவேற்றும் முகவர் நிலையமாகவுமே செயற்படுகின்றது. இவை யாவும் பெண்கள் தொடர்பாக அரசியல் பொருளாதாரக் கொள்கையில் தீர்மானம் எடுக்கும் ஆண்வர்க்க நிர்வகிகளின் கொள்கைகள், கோட்பாடுகளையே பிரதிபலிப்பனவாக உள்ளன. இலங்கையில் பெண்கள் பிரதான உழைப்பாளர்களாகக் கருதப்படாது குடும்ப வருமானத்தைக் குறை நிரப்புகின்ற இரண்டாம் தர உழைப்பாளர் களாகவே கருதப்படுகின்றனர்.

இன்று கொள்கை வகுப்பாளர்கள், நிர்வாகிகள் மத்தியில் பெண்கள் சமூகத்தில் வகிக்கும் முக்கிய பங்கு உணரப்பட்டுள்ளது. ஆயினும் இவற்றின் விளைவுகள் மட்டும் இன்றும் கேள்விக்குறியாகவே உள. இன்று சமூகத்தில் இயங்கிவரும் பல நம்பிக்கை இயக்க செயற்பாடுகள் யாவும், உயர் வர்க்கத்தினரின் பொருளாதார நன்மைகளையே உறுதிசெய்கின்றன. ஆனல், ஏழை வர்க்கத்தினருக்கும் மூலவளம் பங்கீடு உண்டென்னும் மாயையினையும் வளர்த்துக்கொண்டுள்ளனர். உதாரணமாக, கடன் வழங்கும் முறைகள், நிலச்சீர்திருத்தம், விவசாய விரிவாக்கம் போன்ற செயற்பாடுகளைக் குறிப் பிடலாம். மேலும் வறியோருக்காக திட்டமிடப்பட்டு செயலாக்கப்படுவதற்கு வழங்கப் படும் உதவிகளும் வர்க்கம் சார்ந்தவையாகவே உள்ளன. இத் தன்மைகளின் பெரும் பங்கை அனுபவிப்பவர்கள் ஆண்களே.

நாம் உண்மையில் சமூக, பொருளாதார அமைப்பில் காணப்படும் நிலைகளில் மாற்றத்தினை வேண்டின் எமக்கு கோஷங்களும் தீர்மானங்களும் ஓர் ஆரம்பமே பெண்கள் தொடர்பாக அரசாங்கங்கள் ஏற்படுத்தியுள்ள மகளிர் பணியகங்களோ அன்றி அமைச்சுக்களோ, தற்செயலான நிகழ்வுகளே. நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புக்கள் பெண்கள் சமஉரிமை, போராட்டம் போன்றவற்றிற்கு எவ்வகையிலும் உதவுவதாக இல்லை. எவ்வாறான அரசியல் நிலைப்பாடுகளை இவை கொண்டுள்ளன என்பதில் தெளிவின்மை காணப்படுகின்றன.

பெண்கள் பற்றிய சித்தாந்த வளர்ச்சியில் 'அபிவிருத்தியில் பெண்கள்' ஒன்றிணைத்தல் என்ற கோஷம் பல சர்வதேச நாடுகளிலும், திட்ட அமுலாக்க திறன்களைக் கொண்ட மாநாடுகளிலும் பலராலும் முன்வைக்கப் பட்ட கொள்கையாகும். பெண்களை அபிவிருத்தியில் ஒன்றிணைதல் என்பது காலனித்துவ பொருளாதார சிந்தனையில் எழுந்த

ஓர் அணுகு முறையாகும். காலனித்துவ பொருளாதார அமைப்பின் மைய நிலைப்பாடு பெண்கள் பொருளாதார முறைகட்கு அப்பாற்பட்டவர்கள் என்பதனை வலியுறுத்துவதனால் அவர்கள் பொருளாதார கொள்கை திட்டமிடலில் முக்கிய இடத்தினைப் பெறவில்லை. ஆயினும், காலனித்துவ முதலாளி வர்க்கத்தினர் பெண்கள் தொழிற் சக்தியினை பல வழிகளில் சுரண்டுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களாக விளங்கினர். அதனாலேயே அவர்கள் பெருந்தோட்டத் துறைமுகம் அதிக வருமானத்தைப் பெற முடிந்தது அத்துடன் பெண்கள் பணப் பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என்ற அமைப்பினையும் நன்கு பேணிக் காக்க முடிந்தது. இன்று பொருளாதாரம் பல்தேசிய நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ளது. ஓர் பொருளாதாரத் தொடர்புகளில் மாற்றம் ஏற்படும்போது, ஆண், பெண் இருசாராரும் அதற்கேற்ப மாற்றமடைவதுடன் அவர்கள் தொழில் நிலைமைகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது.

எமது நாடுகளில் விவசாய நடவடிக்கை கூட லாப நோக்கத்தினை மையமாகக் கொண்டமைகின்றதே தவிர வறுமை ஒழிப்பினை ஒழிக்கும் நோக்கம் அல்ல. இதன் தாக்கம் அதிகமாக பெண்களையே பாதிக்கின்றது. மிகக் குறைந்த தொழில்நுட்ப வசதியுடன், உற்பத்தித் திறனை அதிகரிக்க முடியாத விவசாய நடவடிக்கைகளில் பெண்கள் கூடுதலாக ஈடுபடுவதனால் குறைந்த சம்பளத்தினையே பெறுகின்றனர். அரசாங்கம் வசித்துள்ள குறைந்த சம்பள நிர்ணய மட்டத்திற்கு கீழ் ஊதியம் பெறுபவர்கள் பெண்களே. தொழிற் சங்கங்கள் கூட பெண்களை ஒழுங்குபடுத்துவதிலும், அவர்கள் தொழில் நிலமைகள்பற்றி அதிக அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. ஆண்கள் வீட்டு வேலைகளில் ஈடுபடாத காரணத்தினால், தமது போதிய நேரத்தினை தம்மை அமைப்பு ரீதியாக ஒழுங்குபடுத்திப் பலப்படுத்த முடிகின்றது. இதனால் ஓர் பலம்வாய்ந்த அமைப்பு சக்தியினை பெறுவதன் மூலம் தமது அந்தஸ்தினை நிலைநாட்ட முடிகின்றது. ஆண்கள் வெளியில் மட்டுமன்றி வீட்டிலும் தமது ஆதிக்க நிலைப்பாட்டினை பேணுகின்றனர். குடும்ப அலகு ஆணிற்குக் கட்டுப்பட்டதாகவே அமைகின்றது. ஓர் ஆண் குடும்பத் தலைவனாக, ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக இருப்பதனால் சேவைகளை மனைவியிடமிருந்து இலகுவாக பெறமுடிகின்றது. பாலியல் உறவுகளை தமது வலிமைக்கேற்ப மனைவியிடமிருந்து அல்லது ஏனைய பெண்களிடமிருந்து பெறுகிறான். இவை யாவும் அவனது பிறப்புரிமை எனக் கொள்ளப்படுகின்றது. சமூகம் இவ்வாறான சேவைகளை வழங்குவதற்கு பெண்களுக்கு ஆரம்பத்திலிருந்தே பயிற்சி அளித்தும் வருகின்றது ஆனால் இந்நிலைப்பாடு இன்று மாற்றம் அடைந்து வருகின்றது. மனைவி அல்லது பெண் ஆணினது தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்னும் நிலைமாறி பெண்ணின் குடும்பப் பங்கு, எதிர்பார்ப்புக்களிலும் மாற்றங்களைக் காண முடிகின்றது.

அரசாங்க செயற்பாடுகள் மூலம் நாம் எதிர்பார்க்கும் மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது சமூக விழிப்புணர்வும், புரிந்துணர்வின் அடிப்படையிலான மனமாற்றமுமே பெண்கள் அந்தஸ்தினை உயர்த்துவதற்கு உரிய ஓர் சிறந்த ஊடகமாகும். மேலும் பரந்தளவிலான பொருளாதார மாற்றங்கள் பெண்கள் பங்களிப்பிற்கு புதிய வரையறைகளை கொடுப்பதோடு இதுவரை பெற முடியாதிருந்த உரிமைகளைப் பெறுவதற்கு வழிவகுக்கும். இவ்வகையில் விழிப்புணர்வினையும், அமைப்பு ரீதியான விரைவான மாற்றத்தினையும் தூண்டும் வகையில் மகளிர் குழுக்கள், ஒன்றிணைந்த ரீதியில் அயராது முயன்று வருதல் அவசியமாகும். இவைமட்டுமே பெண்கள் தன்னம்பிக்கை, சுய கௌரவம், சுதந்திரம் என்ற உறுதிப்பாட்டினை வலியுறுத்தும் சுதந்திரமான சமூகத்தை உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை. ●

# Women and Violence

Women who are aware of their legal rights, and who reject the socially accepted norms to be subordinate and compliant to seek legal redress in disputes relating to property, are inclined to accept violence against themselves as something personal and as men's right. This was revealed in a study carried out by CENWOR recently in a village off Kalutara Moral attitudes oppose any form of violence. Women supposedly have a higher status and are treated with respect Yet gender based violence existed and exists in the Sri Lanka society, as women are exposed to violence because they are women.

Domestic violence, physical abuse, sexual harassment at the workplace, on public streets, rape, abduction are some of the common forms of violence directed at women Prostitution and trafficking in women carry their own forms of trauma, while women have even become victims of ritualistic practices as reported n a news item titled 'Women bashed to death by kapuwa in a bid to drive out the devil'. The current wave of violence in the country has also brought in its wake new forms of violence and suffering to women.

The law is ambivalent with regard to women who are victims of domestic violence or gender based crimes While some of a family laws are rigidly partriarchal, others are supportive of a woman's right to seek protection, equity and justice. The family law seeks to protect women from parental women from parental or marital authority in the limited areas in which these concepts are recognised.

But the law of torts and criminal law are less supportive of women than the family law At these reflect the patriachal values of the Romam - Dutch law particularly in relation to sexual violence. The legal protection of women workers also ultimately depends on the criminal law although the employment law provides limited legal relief This is clearly seen in relation on sexual and other forms of violence used on domestic servants and factory workers.

While the law provides limited relief to women who are victims of violence and which can act as a daterrent, what idealogical biases subject women to gender based violence?.

The study sought to assess a series of responses of a group of rural women to situations of conflict which disrupted social relations resulting in violence against themselves and in the community. The study was confined to obtaining the perceptions of women to various scenarios of violent behaviour. A major intention of the study was to identify the values that the social group endorses and identity the ways that women have of perceiving and judging life situations.

The study was relatively isolated from urban centres. The men were primarily engaged in agricultural persuits while the women were involved with domestic activities. Educational levels of both men and women were relatively low and the villages would fall into the lower middle class in society.

While norms and values governed their relationships with each other, and

in the community, they were all aware of the legal rights and obligations in daily life. But there were significant variations in their perceptions of dealing with individual problems and with those problems arising in the community While violence in the family was something to be resolved without outside interference, in the case of outsiders women were prepared to back up their beliefs by seeking formal sanctions.

Intorxication was considered to be one of the main reasons for men to engage in behaviour considered harmful to women While children were abused as a result of alcoholism there was no physical harm caused to them unlike in the case of women

The women who were assauted seemed to accept the situation They felt that the men beat them because they were at fault. Perhaps they had no patience or they did not perform their wifely duties to the satisfaction of the spouse thus assault was justified. The women did not question the man's right to assult them. There was no question of police intervention but they would put up with the situation A few mentioned that if violence became unbearable they would commit sucide.

However these perceptions changed when the victim was not herself or her daughter In such cases some felt that the police should be contacted While the respondents were inclined to accept violence against themselves as something personal and refuse to see themselves as victims, rape and abduction were perceived differently. These acts of violence called for formal as well as informal sanctions. A few would have the daughter married to the person who committed the crime, reflecting the high value placed on virginity.

The study concludes that women perceive wife beating as an acceptable solution to marital disputes whether violence occurs in the privacy of the home or outside The process of socialisation as subordinate to man leaves her no choice but to be a victim of domestic violence. The women did not attempt to question why such violence exists and why they should conform to customary rules of behaviour.

The findings of this field study indicate that rural women are reluctant to go against accepted rules of conduct and act against custom and tradition. More research is therefore needed to find a support system that can help women realise the detrimental effects of violence on them.

From the legal point of view efforts are necessary to strip the law of its heritage of outmoded values and evolve values that would enable women to abtain equitable relief and justice through the legal system.

Curtesy — Sthree Prabodha

# பெண்களின் கண்களுக்கு'

கோகிலா மகேந்திரன்

"திருமணம்" என்பது ஓர் ஆண், ஒரு பெண்ணை உடைமையாக்கிக் கொள்வது என்று பொருள்படும் அல்வாறு அவன் அவளை உடைமையாக்கிக் கொள்வதற்குரிய அடையாளமே குங்குமத் தீற்றல் சடங்கு என்று சொல்வார் ராஜம் கிருஷ்ணன் காலந்தோறும் பெண், என்ற நூலிலே!

அந்தக் குங்குமத்தை அவன் அவளுக்கு இட்டபிறகு, அவள் அவனைக் 'கண்' போலப் பார்த்துக் கொள்ளவேண்டும். என்பது சமுதாயத்தின் எதிர்பார்ப்பு!

ஒரு பெண் ஆசிர்வதிக்கப்படும்போது, இறுதியாகச் சொல்லப்படுவது, ''தசாஸ்யாம் புத்ரானும் தேஹி, பதிம் ஏகாதசம் க்ருதி...'' இதன் பொருள் ''பத்துப் புதல்வர்களை இந்தக் கணவனுக்குப் பெற்றுத் தருவாய் பின்னர், க்கணவனையே, பதினொராவது புதல்வனாக் கொள்வாய்'' என்பதாம்.

கணவனை ஒரு பெண் தன் பிள்ளை போலக் கவனித்துக் கொள்வது சரி! அவளை யார் கவனிப்பார்கள்?

குடும்பத்தில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும்போது... பல விதப் பொறுப்புக்கள் அழுத்தும்போது... அவளால் நிம்மதியாகத் தூங்கக் கூட முடியவதில்லை. அவள் தூங்கிவிட்டால்... குடும்பம் சரிந்து வி ம்!

ஆனால், தூக்கம் என்பது மனிதனுக்கு மிக அவசியமானது அமைதியாகத் தூங்காமல் பல நாட்களைக் கழிப்பது உடலுக்குப் பல தீங்குகளை விளைவிக்கும்.

குடும்பத் தலைவி நிம்மதியாகத் தூங்குகிறாளா என்று கவனிக்க வீட்டிலே யாரும் இல்லாமல் போனாலும், அவள் தன்னைத் தானே கவனித்துக் கொள்ள வேண்டும்.

இறைவன் மீது கொண்ட அளவற்ற அன்பினால் ஆறு நாள் கண்விழித்தார் கண்ணப்பர் ''நில்லு கண்ணப்ப'' என்று மீளன்பு காட்டினார் இறைவன். குடும்பத் தலைவி சில சமயம் ஆறு வாரம் கண்விழித்து... ஒரு நோயாளியைப் பராமரித்தாலும், அது அவளுடைய கடமையே என்று மிகச் சாதாரணமாகச் சொல்லி விடுவார்கள் மற்றவர்கள்.

யாரும் கவனிக்க மறந்து போகிற இல்லத்தரசியைக் கவனிக்க விரும்புகிறது இக் கட்டுரை!

சகோதரி! உங்களுக்கென்று ஒரு நிச்சயமான வழமையைத் தூக்கம் தொடர்பாக வைத்துக் கொள்ளுங்கள். தூங்கச் செல்லும் நேரத்தையும், விழித்தெழும் நேரத்தையும் அடிக்கடி மாற்றிக் கொள்ளாதீர்கள். முதல் நாள் இரவு, மிகத்தாமதமாகவே நீங்கள் படுக்கச் சென்றிருந்தாலும் கூட, வழமையாக எழும்பும் நேரத்துக்கு 'அலாரம்' அடிக்க வைத்து. எழுந்து விடுங்கள் இது உங்கள் தூக்கப் பழக்கத்தைச் செம்மைப் படுத்தும்.

மாலை நேரத்தில் சிறு தூக்கம் போட விரும்பினால் அதை எப்போதும் செய்யுங்கள். அல்லது ஒரு போதும் தூங்க வேண்டாம். அருமையாக ஒரு நாள் மாலைத் தூக்கம் போட்டீர்களாயின, அன்றிரவு நித்திரா தேவி உங்களிடம் வர மறுத்து அடம் பிடிப்பாள். ''இன்று லீவு நாள் தானே ஆறுதலாக எட்டு மணிக்கு எழும்புவோம்'' என்று சில தினங்களில் படுத்துக்கிடக்கும் பழக்கமும், உங்கள் தூக்கச் சக்கர ஒழுங்கைப் பாதிக்கும்!

படுக்கச் செல்வதற்கு ஒரிரு மணித்தியாலங்களுக்கு முன்னர் கோப்பி போன்ற கபீன் ஊட்டப்பட்ட பானங்கள் அருந்துவதை நீங்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது. படுக்கைக்குப் போகுமுன் கட்டாயம் அதாவது குடிக்கத்தான் வேண்டும் என்றால், பால் குடித்துப் பாருங்கள் ஒரு கோப்பை சூடான பால் நல்ல நித்திரைக்கு உதவும் என்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாக வைத்திய நிபுணர்கள் கருதுகின்றனர்.

நித்திரைக்குச் செல்வதற்கு சற்று முன்னதாக வயிறு நிறையச் சாப்பிடுவதும் விரும்பத்தக்கதில்லை. அப்படி நீங்கள் செய்வீர்களாயின் நீங்கள் உறங்கிய பின்னரும் நீண்ட நேரத்துக்கு உங்கள் உணவுக் கால்வாய்த் தொகுதி சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. படுப்பதற்கு ஒரிரு மணி நேரத்துக்கு முன்பே இரவு உணவை முடித்து விடுங்கள் படுக்கும்போது பசித்தால்.. மெலிதாய் ஏதாவது ஒரிரு பிஸ்கட் போதுமே!

ஒழுங்கான உடற்பயிற்சி நல்ல தூக்கத்துக்கு உதவுமாயின் படுக்க போகும் நேரத்தில் அதிக வேலை செய்து உடலைக் களைப்படையச் செய்தல் விரும்பத்தக்கதில்லை.

"நித்திரை வரவில்லை" என்று நித்திரை மாத்திரைகளை எடுக்கும் எண்ணம் ஒரு போதும் வரக் கூடாது அவை எல்லாமே நித்திரை வட்டத்தைக் குழப்பும் இயல்புடையவை என்பதுடன் நீண்ட காலப் பாவனை நித்திரைக் குறைவை உருவாக்கும்.

குடும்பத்தில் ஆயிரம் பிரச்சனைகள் இருக்கட்டுமே இரவுநேரத்தில் அவை பற்றி ஆழமாக யோசிக்காதீர்கள், உங்களைத்தளர் நிலைக்கு இட்டுச் செல்லக் கூடிய சிந்தனைகள் நடவடிக்கைகள் ஆகியவற்றால் இரவு நேரத்தை நிரப்புங்கள். மனதுக்கு மிக விருப்பமான ஒரு செயற்பாட்டில், படுக்க முன்னர் ஈடுபடுங்கள். அது ஒரு சிறு வெந்நீர் குளியலாக இருக்கலாம் அல்லது மிக இனிமையான ஒரு இசையைக்கேட்பதாகஇருக்கலாம். உங்கள் வாழ்வின் மிக இன்பமான ஒரு சம்பவம் பற்றி நினைப்பதாக கூட இருக்கலாம். அதுவே கடைசிவேலையாக வைத்துக் கொண்டு, தூங்கச் செல்லுங்கள்.

நீங்கள் படுக்கும் அறையின் வெப்ப நிலையை உங்களுக்கும் சாதகமாக வைத்துக் கொள்வதோடு இரவு முழுதும் அந்த வெப்பநிலை நிலவுவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

படுக்கையில் படுத்திருக்கிறீர்கள்! "நித்ரை வரவில்லை! எழுந்து வெளியே வர வேண்டாம்! "நித்திரை இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உடல் தசைகள் தளரட்டும்" என்று நினைத்துக் கொண்டு கண்ணை மூடிப்படுத்திருங்கள் உங்களை அறியாமலே நீங்கள் தூங்கிப் போவீர்கள்

"மெய் வருத்தம் பாரார் பசி நோக்கார். கண் துஞ்சார்" என்ற பாடலுக்குப் பொருந்த ஒழுகிக் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது சரி அதே சமயத்தில்... உங்களையும் நீங்கள் மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கொள்ளுங்கள்.

## வீதி

வீதிக்கு கண்ணிருந்தது,
வாய் இருந்தது.
மணந்தான் இல்லை.
இதயத்தைக் கூறு போடவும்,
துடிப்பதை வேடிக்கை பார்க்கவும்
நிறைய நேரமிருந்தது,

—புதிய ஜீவன்

## என்
## அன்பு நண்பனுக்கு




அன்புள்ள நண்பா
உன் — அன்பு
மடல் கிடைத்தது
அதிர்ச்சியுடன் கூடிய
மகிழ்ச்சி
கடல் கடந்து சென்ற நீ
காகிதம் வரைய மறக்கவில்லை
ஆனால்
கடந்த காலத்தை
மறந்துவிட்டாய்
எம் மண்ணில்
இலட்சிய வாதியாக இருந்த நீ
அன்னிய மண்ணின் அடிமைத்தனத்
தால்
உன்
இலட்சியங்களை
மறந்துவிட்டாயா?
அன்புள்ள நண்பா
சமூகம் ஆயிரம்
சொல்லும் — ஆனால்
நாம்
புதுமையைப் படைப்போம்
என்று புறப்பட்டாயே
இப்போது
ஆதிக்கம் கூடிய அன்னிய மண்
உன்
புதுமையை குழிதோண்டிப்புதைத்து
விட்டு
குரோத பார்வையை
என்மேல்
வீச வைத்துள்ளதா?
வேதனைப்படுகிறேன் நண்பா
வேதனைப்படுகிறேன்
அன்று நீயும் நானும்
நம் நண்பர்களும்
சேர்ந்து கதைத்தவையை
எண்ணி
வேதனைப்படுகிறேன்
நண்பா
வெட்கமும் அடைகிறேன்
என்
அன்பு நண்பனே
நாம் சந்தித்த நாட்கள்
சேர்ந்து திரிந்த வழிகள்
படித்த
பள்ளிக்கூடம்
சந்தித்த மனிதர்கள்
பற்றிய மறைந்திருக்கும்
மனப்பிரதிகளை
மீண்டுப் ஒரு முறை
மீட்டுப் பார்
அன்புள்ள நண்பா
உன்னைப் பார்த்து
அதிசயப்படுகிறேன்
ஆனால் அலட்சியப்படுத்த முடியவில்லை
பழகும் வரை பழகிவிட்டு
பழியை என்மேல் போட்டு
விலக வளர்முக நாடு
உன்னை
வளப்படுத்தி விட்டதா?
அன்பு நண்பனே!
இப்போதுதான் எம்
மண்ணின் பெருமை
எனக்குப் புரிகிறது
உன் மனதை
புனிதமாக வைத்திருந்த
புகழ்நிறைந்த
மண்ணென்று
என்
அன்பு நண்பனே
உன்னை
பிரித்துப்பார்க்க
முடியவில்லை
நமமில் என்றும்

பிரிவுமில்லை
அன்பு நண்பா
மெல்லிய சலனங்கள்
இளமை உபாதைகள்
எட்டிப் பார்ப்பது
இயற்கையே
அவை நிட்சயம்
உறுதியான
உணர்வுகளால்
உறக்கம் அடையும்
ஏனெனில்
மாற்றங்கள்
எம்
கண்களில் தான்
மனதில் அல்லவே.

தசாந்தியா
சுழிபுரம்.

## இயல்பிதுவே

விதியெதுவோ
மதியதுவே
சதியெதுவோ
பதியதுவே

கனியெதுவோ
மரமதுவே
பணியெதுவோ
வினையதுவே

இறையெதுவோ
திறையதுவே
மறையெதுவோ
மணமதுவே

பொறையெதுவோ
குறையதுவே
உறவெதுவோ
துறவதுவே

இறைவரினும்
நிறைவதுவே
உலகினது
இயல்பிதுவே

— அக்னிராஜ்

## என் கதியும் புரிந்துவிடும்

நாடு திரும்பிய நாள் முதலாய்
நாடியிருக்கின்றார் மக்கள் சேவை
ஊராரின் உயர்வது பொங்கிட
உழைக்குமந்த உள்ளத்திற்கிது
நாளாந்த வாழ்வாய் போனதுவோ
நாளடைவில் இவர் நிலையும்
நடுத்தெருவு தானதுவோ
காரணம் யாதெனக் கேட்பின்
அறியாமையில் வாழ் - மக்கள்
தினம் ஒரு பக்கம்
உங்களுக்கு
இந்தச் சங்கதிகள் புரிந்துவிட்டால்
என் கதியும் புரிந்துவிடும்.

## கதி

நமது எதிர்காலம்
இதைவிட மோசமாக
இருக்கப் போகின்றது.
ஏன் தெரியுமா
நாங்கள் ஆளுக்கொரு
வழியில் நடக்கின்றோம்
எம் வலிமை சிதறுகிறது
பயம் பாய் விரிக்கிறது.
பல போலிகள்
வலை விரிக்கின்றார்கள்.
தெரிகின்றதா?
சகோதர சகோதரிகளே
உங்களுக்கு
இந்தச் சங்கதிகள் புரிந்துவிட்டால்
என் கதியும் புரிந்து விடும்.

— வாசன் சொர்ணலிங்கம், பரந்தன்

## யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம் 1830 – 1865

# அரச பணிகளும் கிறிஸ்தவ சமயக் குழுக்களின் ஆதரவும்

1829 இல் கோல்புறூக் குழுவினர் இலங்கையின் பல்வேறு நிர்வாகங்களையும் ஆராய்வதற்குப் பிரித்தானியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டனர். இதுவரைகாலமும் கல்வி சுவிசேடத்தைப் பரப்பும் நோக்கத்தையே கொண்டிருந்தது. கல்வியின் நிலையும் திருப்திகரமானதாக இல்லை. அதிலும் பெண்கல்வி நிலை இலங்கை முழுவதிலும் தாழ்ந்த நிலையிலேயே இருந்தது.

தீவு முழுவதிலுமே 1554 பெண்கள் மட்டுமே பாடசாலை சென்றுகொண்டிருந்தனர் யாழ்ப்பாணப் பகுதியில் 150 மாணவிகள் மட்டில் இருந்திருக்கிறார்கள். கோல்புறூக்' இனது கல்விக் கொள்கை "அரசாங்க ஊழியத்துக்கு அலுவலர்களைத் தயார்செய்து சுதேசிகளை ஐரோப்பியரின் கல்வித் தகைமைகளை அடையச் செய்தலே'' எனக் கூறப்பட்டது.

இவரது விதப்புரைகளிற் பெண்கல்வி பற்றிய எதுவித முயற்சிகளும் காணப்படவில்லை. இக்கால கட்டத்தில் பிரித்தானியாவில் அரசியல் நிறுவனங்களில் பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அரசியல் நிறுவனங்களல்லாத பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி மட்டும் ஆண்களுடைய கல்விக்குச் சமமாக அளிக்கப்பட்டு வந்தது. இடைநிலைக் கல்வியில் பெண்களுக்கான ஆர்வம் காட்டப்படவில்லை. பல்கலைக்கழகங்களும் பெண்களுக்குத் திறந்துவிடப்படவில்லை. கேம்பிறிட்ஜ் கல்லூரியில் மட்டும் குருமாருடைய புத்திரிகளுக்குச் செலவு குறைந்த கல்வி கற்பிக்க முயற்சி எடுக்கப்பட்டன.

பிரித்தானியாவில் உயர் வகுப்பாரும், மத்திய வகுப்பாரும் கல்விக்கூடங்களுக்குச் செல்வதில்லை. இவர்களுக்குப் பிரத்தியேக ஆசிரியர்களை வைத்துச் சிலகலைகளைக் கற்பித்தார்கள். அதாவது சமூக விழாக்களில் அவர்கள் நடந்துகொள்ளும் முறை, விருந்தினரை உபசரிக்க, உணவூட்ட, நடனமாட எனச் சமூகப் பழக்க வழக்கங்களும் சில ஐரோப்பிய மொழிகள் அலங்காரக் கலைகள் என்பனவும் கற்பித்தார்கள். பொதுவாகச் சமூக அந்தந்தைப் பெற்ற கணவன் ஒருவனுக்கேற்ற மனைவியாக வரும் தகுதிகளைக் கற்றறிந்தார்கள். இத்தகைய சமுதாயத்திலிருந்து வந்த கோல்புறூக் குழுவினர் மிகத் தாழ்ந்த நாகரீகத்திலிருந்த இலங்கைப் பெண்களின் ஆரப்பக்கல்விபற்றித் தானும் அக்கறை எடுக்காதது வியப்பான காரியமல்ல.

சமயப் பரப்புக் குழுக்களின் பாடசாலைகள் திறமையாகச் செயற்படுவதைக் கண்டு பாதிரிமாருடாக அரசுக்கு அதிக செலவில்லாமல் கல்வி புகட்டப்படுவதை இவர் விதப்புரை செய்தார் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கன் சமயக் குழுவினரின் கல்வி முறையையும், திறமையும் கோல்புறூக்கின் நன்மதிப்பைப் பெற்றன.

கோல்புறூக் விதப்புரைகளின் மேல் செய்யப்பட்ட சீர் திருத்தங்களில் யாழ்ப்பாணத்தில் அதிக செலவோடும் திருப்தியற்ற முறையிலும் இயங்கிக் கொண்டிருந்த அரசாங்கப் பாடசாலைகளை மூடவோ அல்லது

கிறிஸ்தவ சமயக் குழுக்களுக்குக் கையளிக்கவோ வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்படி 1842 இல் ஒரு ஆங்கில பாடசாலையும் 4 சுயமொழிப் பாடசாலையும் மூடப்பட்டன.

யாழ். மாவட்டத்தின் கல்விப் பணியைக் கிறிஸ்தவ குழுக்களுக்குக் கையளித்து இதுவரை தனியார் பாடசாலைகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டுவந்த உதவி நன்கொடைப்பணத்தை கி.ச. குழுக்களுக்கும் கொடுக்க மத்திய பாடசாலை ஆணைக்குழு தீர்மானித்தது. எனவே மத்திய பாடசாலை ஆணைக்குழு உதவி நன்கொடையைக் கிறிஸ்தவ சமயக் குழுக்களுக்கு விஸ்தரித்தபோது சிலநிபந்தனைகளையும் வைத்தது – அதாவது உலகியலறிவு சம்பந்தப்பட்ட அறிவை விருத்தி செய்யும் கல்வியே போதிக்கப்பட வேண்டுமெனவும், பரிசோதகர்கள் நினைத்த நேரத்தில் பாடசாலைகளுக்குப் பரிசோதனைக்காக வருவதைத் தடைசெய்யக் கூடாதெனவும் கூறப்பட்டது. 1848 இல் அரசிடமிருந்து உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் 28 யாழ்ப்பாணத்தில் இருந்தன. இருபத்தெட்டுப் பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களாகவும் கிறிஸ்தவ சமயக் குழுக்களின் நிறுவனங்களாகவும் இருந்தன.

வண.பொன்ஜீன் குருவானவரின் அயரா உழைப்பினாலும் அன்றைய மத்திய ஆணைக்குழுத் தலைவரும் பிற்காலத்தில் ஆள்பதியாக வந்தவருமான சேர் சார்ள்ஸ் மக்காதி அவர்களின் சாமர்த்தியத்தாலும் 1851 ஆம் ஆண்டு தொடக்கம் றோமன் கத்தோலிக்க பாடசாலைகளும் உதவி நன்கொடை பெறத் தொடங்கின.

இதனைக் கண்ட ''யாழ்ப்பாணத்தேசிய கல்விச் சங்கம்'' தமக்கும் உதவி நன்கொடை வழங்குமாறு விண்ணப்பங்களை அனுப்பியது. இச்சங்கத்தின் தலைவரான ஆறுமுக நாவலர் பல மனுக்களை அனுப்பியபோதும், அரசு கிறிஸ்தவ மதம் பரப்புதலை ஆதரித்ததால் தமது பாடசாலைகளைத் தவிர ஏனைய பௌத்த, இந்து, முஸ்லிம் பாடாலைகளுக்கு எதுவித நன்கொடையும் வழங்க முடியாதென அறிவித்தது. அதன்பின் அடுத்த 20 ஆண்டுகளுக்கு இத்தகைய கோரிக்கைகள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

மாயின. அக்கால கட்டத்தில் தீவின் ஆண்பாடசாலைகள் ஐந்து பிரிவாகவும், பெண்பாடசாலைகள் மூன்று பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் குறிப்பிட்ட சில பிரிவுகளே கட்டணம் கொடுக்க நேர்ந்தது.

அ. ஒல்லாந்த குருச்சபையைச் சேர்ந்த பெண் பாடசாலையும் பெண்கள் செமினறியும்

ஆ. பெண்கள் ஆங்கிலப் பாடசாலைகள்

இ. பெண்கள் சுயமொழிப் பாடசாலைகள்

இவற்றுள் 'அ' பிரிவைச் சேர்ந்த பாடசாலைகளிலே கட்டணம் வசூலிக்கப்பட்டது.

1856இல் ஆள்பதி கென்றி உவாட் யாழ்ப்பாண விஜயமொன்றை மேற்கொண்டபோது சமயக் குழுக்களின் பாடசாலைக்குப் போகவிருப்பமில்லாதோருக்கு அரசாங்கம் ஆங்கிலப் படசாலைகளை நிறுவித்தரவேண்டும் எனக் கருணை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. எனவே 1860 ஆம் ஆண்டு 'பெண்கள் மேனிலைப் பாடசாலை' ஒன்றும் அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. 1861 இல் இங்கே 50 மாணவிகள் கல்வி கற்றனர். இவருள் 48 பேர் ஐரோப்பிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இருவர் ஆங்கிலேயர். இலங்கையர் ஒருவருமிலர்.

## திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம்

1847 ஆம் ஆண்டளவில் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பாடசாலைகளில் கட்டணம் அறவிடப்படும் முறை தொடங்கியது. மேற்கு, தெற்குப் பகுதிகளிலிருந்த அரச பாடசாலைகள் தளர்வுறத்தொடங்கின. பல பிரித்தானிய ஆசிரியர்கள் திரும்பிச் செல்ல வேண்டியேற்பட்டது. யாழ்ப்பாணப் பாடசாலைகள் இதர பகுதிகளிலும் மேம்பாடாக நடந்தமைக்குக் கிறிஸ்தவ சமயக் குழுக்களே காரண

செல்வி ஜீ. ரீலிங்ஸ் அதிபராகவும் திருமதி A. மார்ட்டினெஸ் உதவியாசிரியராகவும் கடமையாற்றினர், இவர்களுக்கு வருடமொன்றுக்கு முறையே 200 பவுனும் 24 பவுனும் வழங்கப்பட்டது. இப்பாடசாலை பின்னர் பெண்கள் ஆங்கிலப் பாடசாலை என அழைக்கப்பட்டது.

அமெரிக்கன் சபைக்குழுவினுல் ஏற்கனவே அமைக்கப்பட்ட உடுவில் பெண்கள் விடுதிப் பாடசாலையைத் தவிர 1834 இல் வரணியில், அப்பிரதேசத்துக்குப் பொறுப்பாயிருந்த வண. அப்தோப் குருவானவரின் மனைவியார் மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் அப்தோப் அம்மையார் காலமாகத் தகுந்த மேற்பார்வை இன்மையால் 1845ஆம் ஆண்டு மூடப்பட்டது.

வடமாகாணத்து மெதடிஸ்ற் சபைக்குப் பொறுப்பாயிருந்த வண. பீற்றர் பேர்சிவல் பாதிரியாரும் அவருடைய அம்மையாரும் 1834 ஆம் ஆண்டில் யாழ் நகரப் பகுதியில் பெண்களுக்கான விடுதிப் பாடசாலை ஒன்றை 5 மாணவிகளுடன் நிறுவினர் 1837ஆம் ஆண்டு அறிக்கைகளின் படி இப்பெண் பாடசாலையில் மேற்பிரிவில் 24 பெண்பிள்ளைகளும் கீழ்ப் பிரிவில் 38 பெண்பிள்ளைகளும் கல்வி கற்றனர். இவர்களுள் 6 பேர் விடுதி மாணவராயிருந்தனர். இந்த ஆங்கிலப் பாடசாலையே பிற்காலத்தில் 'வேம்படிப் பாடசாலை' எனப் புகழ்பெற்றது.

இதனேடு பேர்சிவல் பாதிரியாரால் ஆரம்பிக்கப்பட்ட ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையில் அப்போது 150மாணவர் இருந்தனர் இது பிற்காலத்தில் யாழ் மத்திய பாடசாலை எனப் பெயர்பெற்றது.

கத்தோலிக்க மதத் தலைமைப் பீடம் 1845ஆம் ஆண்டில் ஆண்களுக்கு ஆண்கள் செமினரி எனவும் பெண்களுக்குப் பெண்கள் செமினரி எனவும் இருபாடசாலைகளை யாழ்ப்பாணத்தில் நிறுவியது பெண்கள் ஆங்கிலப்பாடசாலையை திருமதி மேரி ஆன் ஓ பிளானேகன் என்னும் ஐரிசு விதவை பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

திருச்சபைச் சமயக்குழுவினரும் 1842இல் கல்லூரியில் ஒரு பெண்கள் விடுதித் தமிழ்ப் பாடசாலையை நிறுவினர். 1846 இல் வண. ஜேம்ஸ் ஓ நீல் பாதிரியாரின் மனைவியார் பொறுப்பேற்று இருவருடத்தில் இறந்துபோக திருமதி லோங் என்பவர் நடத்திவந்தார்.

உதவி நன்கொடை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அமெரிக்கன் சமயக்குழுவினரின் திறமை நோக்கி அவர்களுக்கு 200 பவுணும், மற்றைய சமயக்குழுவினருக்கு 150 பவுணும் வருடமொன்றுக்கு வழங்கப்பட்டது. இந்த ஊக்கலின் காரணமாக, யாழ் மாவட்டத்தில் மேலும் பல பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்டன.

பெண்கள் பாடசாலைகளில் கல்வி கற்பித்த ஆசிரியர் பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. ஆரம்ப காலத்தில் தகுந்த ஆசிரியரைப் பெறுவதில் மிகக் கஷ்டம் எதிர்நோக்கப்பட்டது. ஆசிரியைகள் மேல் நாடுகளிலிருந்தே தருவிக்கப்பட்டனர். அதனுல் பெருஞ் செலவு ஏற்பட்டது. பெண்ணுசிரியைகளின் பற்ருக் குறையால் பெண்களின் கல்வி பாதிக்கக்கூடாதென ஆண் ஆசிரியர்களுக்கும் சிற்சில பாடசாலைகளில் அனுமதி அளிக்கப்பட்டது.

ஆசியாவின் முதற் பெண் விடுதிப் பாடசாலை எனப் புகழ் பெற்ற உடுவில் பெண்கள் பாடசாலை முதலில் உவின் சிலோ அம்மையாராலும், பின்னர் ஸ்யோல்டிங் அம்மையாராலும் நடாத்தப் பட்டபோதுவட்டுக்கோட்டை செமினறியில் படித்த நதானியேல் நைல்ஸ், றூபஸ் பெய்லியோநாதன் ஹோமர் முதலியோர் 1837 தொடக்கம் ஆசிரியராக நியமிக்கப்பட்டனர் 1840ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இப் பாடசாலையிற் கற்பிக்க வென மூன்று அம்மையார்கள் வந்திருந்தனர். செல்வி கள்ஸலா அக்நியூ, சேராபிறவுண், சேனலாதிரேப் எனும் இவர்கள் ஆங்கில அறிவை வளர்த்து வந்தனர். இவர்களுள் செல்வி லைலா அக்நியூமட்டும் யாழ்ப்பாண மக்களுடன் தன்னை ஒன்றித்து, தன்னலமற்ற சேவையால் மக்கள் உள்ளங் கவர்ந்து 43 ஆண்டுகள் இறைபணியும் ஆசிரியப்பணியும் செய்து இறைவனடி சேர்ந்தவர்.

மெதடிஸ்ற் சபையைச் சேர்ந்த பேர்சிவல் பாதிரியார் 23 3 1837 இல் எழுதிய நாட்குறிப்பில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"இப்போது எமது கவனத்தைப் பெண்கல்வியில் திருப்பியுள்ளோம் தவிர்க்க முடியாத கஷ்டங்கள் எம் முன் வந்தாலும் சிறிது வெற்றியும் பெற்றுள்ளோம் ...... தங்கள் பெண்களின் கல்வி விடயத்தில் ஆண்கள் மாத்திரமல்ல வயதுவந்த பெண்களே முழு எதிர்ப்பையுங் காட்டுகின்றனர்".

இவர் தகுந்த ஆசிரியைகளைத் இங்கிலாந்திலிருந்து தருவிக்க எடுத்த முயற்சிகள் பயனற்றுப் போகவே, 'கிழக்கு நாடுகளிலும் சீனுவிலும் பெண் கல்வி வளர்ச்சிக்கான சமய சார்பற்ற மகளிர் சங்கம்" எனும் மன்றத்துக்கு மனுப் பண்ணினர். அச்சங்கத்திலிருந்து பெண்கள் விடுதிச்சாலையை நன்முறையிலமைத்துச் செயற்படுத்த செல்வி ருவிட்டி (Twiddy) அனுப்பப்பட்டாள். இது பற்றி உதயதாரகை எனுப் பத்திரிகை 18 3 1841 ஆம் நாளேட்டில் "பெண் கல்வி முன்னேற்றத்துக்குப் பேர்சிவல் பாதிரியாருக்கு உதவி செய்ய 5 3 41 இல் செல்வி ருவிட்டி வருகை தந்தார்" எனப் போடப்பட்டிருந்தது.

இவளுக்கு வசிப்பிடமாக சபையினரின் வளவுக்குள் இருந்த வீட்டோடு 2 அறைகள் சேர்த்துக் கட்டப்பட 18 பவு 15சி செலவு ஏற்பட்டதென சபையின் வரவு செலவு அறிக்கை கூறுகிறது இவரின் முயற்சியால் இச்சபையின் முதலாவது சமயப் பரப்பாளராக 1861 ஆம் ஆண்டு செல்வி இயாகொட் இங்கிலாந்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டார்.

அரசாங்கமும் மேற்படி சங்கத்துக்கு மனுப்பண்ணித் தமது பெண் பாடசாலைகளுக்கு ஆசிரியைகளைத் தேடிக்கொண்டது. மாத்தளை, கண்டி காலி யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் ஆரம்பிக்கப்பட்ட பெண் பாடசாலைகளுக்கும் அங்கேயிருந்து அதிபர்கள் வந்தனர்.

ரோமன் கத்தோலிக்க சமயக் குழுவினரால் நடாத்தப்பட்ட பெண் பாடசாலைக்கும் பெண் ஆசிரியர்கள் தேவையாக இருந்தது. பிரான்ஸ் தேசத்திலே 1820 ஆம் ஆண்டு கன்னிப்பெண்கள் தமது லௌகீக வாழ்வைத் துறந்து இறைபணியில் ஈடுபடவேண்டும் எனும் குறிக்கோளோடு தனித்துவமான ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டிருந்தது. இச்சங்கம் 1861 ஆம் ஆண்டளவில் திருக்குடும்பத்தைச் சார்ந்த 224 மடங்களிலே 2000 கன்னியாஸ்திரிகளை உடையதாகி வறியவர்களுக்கும் நோயாளிகளுக்கும் சேவையாற்றிக் கொண்டிருந்தது.

திருக்குடும்பக் கன்னியர் மடம் எனப் பெயரிடப்பட்ட இச்சபைக்கு வண. பெற்ருக்கினி குருவானவர் வேண்டுகோள் விடுத்ததன் மேல் வெளிநாட்டுச் சேவைக்காக முதன் முதலில் தெரிந்தெடுக்கப்பட்ட நாடு இலங்கையாகும் 1862 ஆம் ஆண்டில் இத்தகைய கன்னியாஸ்திரிகள் அறுவர் முதன்முதலாக இலங்கை வந்தனர். யாழ்ப்பாணக் குருமுதல்வர் சமேரியாவால் இங்கே அழைத்து வரப்பட்டனர். மந்தநிலையில் இயங்கிக்கொண்டிருந்த பெண்கள் பாடசாலையையும் அநாதையில்லத்தையும் பொறுப்பேற்றுப் பல சீர்திருத்தங்கள் செய்தனர். இத் திருக்குடும்பக்கன்னியர் சபையில் ஏற்கனவே ஆசிரியையாக இருந்த, மேரி ஓபிளனேகனின் மகள் கத்தறின் சேர்ந்து பயிற்சி பெற்று முதலாவது கன்னியாஸ்திரியாக 1867 ஆம் ஆண்டில் வெளியேறினர்.

இவ்வாறு பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை சகல குழுக்களும் மிகக்கஷ்டத்தோடு மேல்நாடுகளிலிருந்து தருவித்து ஆங்கிலக் கல்வியறிவு மேலைத்தேய நாகரிகம், பழக்கவழக்கம் முதலியவற்றைச் சுதேச பெண்களுக்குக் கற்பித்து வந்தனர்.

---

## பிளவு

அந்நியமாய் போனதினுல்
ஒன்றும் நடக்கவில்லை
என்னிதயம் அழுததைத் தவிர;

— புதியஜீவன்

# எதிர் பார்ப்புக்கள் ஏமாற்றமான போது

புதுகர். கவிப்பிரியா

(சிறுகதை)

பொழுது புலர்ந்ததை விளம்பரப்படுத்துவது போல புள்ளினங்கள் தத்தமக்குத் தெரிந்த பாஷைகளில் ஆரவாரித்து தம் மகிழ்ச்சியினை தெரிவித்தன. அந்த ஆரவாரத்தை காதில் வாங்கிக் கொண்ட மஞ்சுளா இந்தப் பறவைகளைப் போல நாமும் இருந்தால் எமது வாழ்க்கையும் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்று அலுத்துக் கொண்டவளாக கட்டிலில் புரண்டாள்.

அவள் புரண்டு, கையை இதமாக மடித்து தலைக்குள் ஆதரவாகப் பிடிக்கும் போது கட்டிலின் அருகில் படுத்திருந்த அவளின் றூம் நண்பிகள் வீணா, வனஜா, பிரிந்தா ஆகியோர் வெறும் தரையில் அமைதியாக தூங்கும் காட்சி அவளுக்கு வியப்பாக இருந்தது. அவர்களை கூட எவ்வளவு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கும் போது

“அக்கா...... அக்கா இந்தச் சுடலைக் குருவி இப்ப கொஞ்ச நாளாய் நெடுகக் கத்திக் கொண்டிருக்கு.”

வனஜா பிரிந்தாவின் காதுக்குள் கிசு கிசுத்தாள். ஆனால் பிரிந்தாவே தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

“அக்கா பயமாக இருக்குது” அவள் சிணுங்கினாள். முதல் நாள் நடந்த அந்தப் பயங்கரச் சமபவத்தை எண்ணித்தான் அவள் பயப்படுகிறாள் என்பதைப் புரிந்து கொண்ட மஞ்சுளா

“ஏய்! வனஜா அது சுடலைக் குருவி இல்லை அது வேறை ஏதோ கத்துது நீ பேசாமல் படு” என்று வனஜாவை சாமதானப்படுத்தி விட்டு தன்னைத் தானே சாமாதானப் படுத்தி தூக்கத்தில் ஆழ முடியாமல் தவித்தாள். அவள் இன்று மட்டுமல்ல இரண்டுமூன்று நாட்களாக அவ்வாறு தவித்துக் கொண்டே இருந்தாள்.

ஏதோ நினைவு வந்தவளாக திடீரென எழுந்து லயிற்றைப் போட்டாள் தலையணையின் கீழ் இரவு புதைத்து வைத்திருந்த செங்கை ஆழியானின் மழைக் காலம் புத்தகத்தை எடுத்துப் புரட்டத் தயாராகினாள் புத்தகத்தின் முன் புற அட்டைப் படம் மிகவும் அழகாக இருந்தது அதில் அழகிய வாலிபனின் அணைப்பினுள் நாணி நிற்கும் நங்கையின் ஓவியத்தை சில நிமிடம் கண்வெட்டாமலே கவனிக்கலானாள். பின்னர் அந்த நங்கையை அரவணைக்கும் வாலிபனை ஏக்கத்தோடு நோக்கினாள்.

கண்களை விலக்கி புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டத் தொடங்கினாள் பக்கங்களை ஒழுங்கில்லாமல் எவ்வளவு நேரம் புரட்டி இருப்பாள் என்று அவளுக்கே தெரியாது.

தெரிந்ததும் கதையில் கவனம் செலுத்த லானாள். சொலோன் விமானத்தில் தேவி மைக்கலை எதிர்பார்த்தபடி என்றுமே அறி முகம் இல்லாத அந்த மைக்கலை வருவாரா? வருவாரா? எப்படி அவர் இருப்பார் என்று அவள் மைக்கலை நினைவு படுத்த முயன்ற பகுதியை மஞ்சுளா பல தடவைகள் வாசித்து விடடு சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ஓ... மஞ்சுளாவும் எத்தனை எத்தனை நாட் களாக தேவி அந்த ஒன்றுமே தெரியாத வாலிபன் மைக்கலை நினைவு படுத்த முயன்றது போல சுமனை நினைவு படுத்த முயன்று இருக்கின்றாள். பார்க்காத முகம் கேட்காத குரல் படத்தை மடடும் பார்த்திருக்கிறாள் அந்தத் தேவிக்கும் எனக்கும் என்ன வித்தி யாசம். தேவி வீரகேசரி வாரமலரைப் பார்த்து மைக்கலுக்கு விண்ணப்பித்து இருக்கிறாள் சுமன் வீரகேசரி வாரமலரில் வெளியான எழுத்தாளர் அறிமுகத்தை சஞூதியில் இருந்தது பார்த்து விட்டு கவிதைக்காக எனக்கு விண்ணப்பித்து இருக்கிறார். அது தான் வித்தியாசம் என்று எண்ணியவாறு மீண்டும் புத்தகத்தை ஆராயலானாள்.

பாவம் தேவி ஏன் ஐந்தாண்டுகள் மைக்க லுடன் ஆனந்தமாக ஜேர்மனியில் வாழ்ந்து விட்டு திடீரென இலங்கை திரும்புகிறாள் என்று அறியும் ஆவலுடன் கதையை வேக மாக வாசிக்கத் தொடங்கினாள்.

மைக்கல் நீங்கள் ஏன் உங்கள் முதல் மனை வியை டைவோஸ் பண்ணினீர்கள்......

இவ்வாறு மஞ்சுளாவும் ஒரு தடவை சுமனுக்கு கடிதம் எழுதும் போது சுமன் நீங் கள் முன்பு காதலித்த வசந்தியை ஏன்விட்ட னீர்கள் என்று எழுதிக் கேட்டதும் அதற்கு அவன் பக்கம் பக்கமாக காரணங்கள் காட் டியதும் நினைவுக்கு வந்து திரும்பியது.

தியாகுவை ஒரு தடவை இராணுவம் பிடித்தது அக்கா றெயினுக்குள் தங்கை கூறி யதும் தேவியின் இதயத்தின் ஒரு மூலையில் வலி கண்டது.

யார்? அந்தத் தியாகு அந்தப் பாத்திரத்தை அறியும் ஆவலில் மஞ்சுளா கதை வாசிப்பதை துரிதப்படுத்தினாள் ''சீதனம் இல்லாமல் செய்தால் அம்மா மருந்து குடிச்சு சாவன் என்கிறா தேவி''

தியாகு தேவியை காதலித்தானா? அந்தத் தியாகுவா இப்படிக் கேட்டான் மஞ்சுளா வால் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை—

மஞ்சுளாவின் எழுத்துலகப் புனைபெயர் சப்தசந்தியா, அப்பெயரை சுருக்கமாக சுமன் சந்தியா என்றே எழுதுவான் இவ்வாறு அவனும் ஒரிரு கடிதங்களில். ''சந்தியா அம்மா சீதனம் கேட்கிறா சீதனம் இருந்தால்தான் விரும்பிய பெண்ணைச் செய்ய விடுவாவாம். இல்லாவிட்டால் தான் விரும்பிய பெண்ணைத் தான் செய்ய வேண்டுமாம். என்று அவன் எழுதிய கடிதங்கள் அவள் கண் முன் நிழலா டியது.

ம்... ஆண்களே இப்படித்தானா? தமதுகாதலை வெளிபபடுத்தும் போதும் பெண்களை தம் வசம் திருப்பும் வரையும் பெண்களிற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் பெண்ணின் உள்ளத்தில் வீணான சலனங் களையும் சபலங்களையும், வளர்த்து விட்டு இறு தியில் தங்கள் கையாலாகாத்தனத்தை காட்டி விடுவது அவர்களிற்கே உரிய குண மாகி விட்டது.

அம்மா...... அம்மா என்று அம்மாவைச் சாட்ட இவர்களிற்கு எப்படித்தான் மனம் வருகிறதோ அவர்களின் காதல் உண்மை யானது. தூய்மையானது அது மரணத்தாலும் மாற்ற முடியாததாக இருந்தால் என்று வார்த்தைகளை முடிக்காமலே முணுமுணுத்த வாறு புத்தகத்தை வெறுப்போடு வைத்து விட்டு சுவரை வெறித்தபடி கட்டிலில் ஒருக் களித்துப் படுத்தாள்.

மஞ்சு உன்னை றஞ்சித் கேட்டு எழுதியிருக் கிறார். சந்தியாவின் சுகங்கள் எப்படி என்று குரல் கேடடுத் திரும்பினாள் மஞ்சு. பிரிந்தா முதல் நாள் றஞ்சித்திடம் இருந்து வந்த கடி தத்தை அந்த அமைதியான காலைப் பொழு திலே படுக்கையை விட்டு எழுந்திருக்காமலே மிகவும் ஆனந்தமாக வாசிப்பதை கவனிக்க லானாள்.

சுமன் ஒருதடவை சவுதியில் இருந்து றஞ்சித்திடம் ஒரு சிறு பார்சல் கொடுத்து விட்டிருந்தான். அதன் மூலமே றஞ்சித் மஞ்சுளாவுக்கு அறிமுகமானவன்.

சுமன்... சுமன்... அந்த நாட்களில் உங்களிடமிருந்து வரும் அன்பான மடல்களின் சுகங்கள்தான் எத்தனை, அவளின் கண்கள் மெல்ல கலங்கின.

அவற்றை மறைக்க புத்தகமே அப்போது அவளுக்கு உதவியது.

தேவி தன் குழந்தையுடன் யாழ்ப்பாணம் வந்து தாய் தங்கைகளுடன் ஒன்றி விட்டாள். ஆனால் அவளின் நினைவு மட்டும் மைக்கலைச் சுற்றிச் சுற்றியே வட்டமிட்டது மஞ்சுளாவின் உள்ளம் பரபரத்தது என்தான் இந்த தேவி மைக்கலைப் பிரிந்தாளோ?

கண்களை வேகமாக எழுத்தின் மேல் மேய விட்டாள்.

ஓ...... மைக்கல் நீங்கள் இப்போ என்ன செய்வீர்கள்.

ஒரு நாள் நையிற் கிளப் பொன்றில் அவர்கள் நடனம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தேவி சேலை அணிந்து பின்னிவிட்டிருந்தாள். சுவெட்டர் அணிந்திருந்தாள். ஒரு ஜேர்மனிய இளைஞன் அவர்களின் டேபிளுக்கு வந்தான்.

''பியூட்டிபுள் இன்டியன் கேர்ள்'' என்றான் தாங்ஸ் என்று மைக்கல் சிரித்தான்.

தேவியின் கடந்து போன நினைவுகளை வாசித்த மஞ்சுளாக்கு அன்று ஒரு தடவை றஞ்சித் அவளிடம் வந்தபோது பிரிந்தாவைப் பார்த்து விடடு சென்று பின்பு கடிதம் எழுதும் போது

உங்கள் நண்பி பிரிந்தா ''பியூட்டிப்புள் கேர்ள்'' அவாவை நான் மனமார விரும்புகிறேன் அவரின் விருப்பத்தைக் கேட்கவும், என எழுதிய வரிகள் நினைவில் தட்டியது.

தேவியின் குழந்தை தாமஸ் நன்றாக அயர்ந்தது தூங்கிக் கொண்டிருந்தான். மைக்கலும் இப்படித்தான் காலையில் நீண்ட நேரம் படுக்கையில் புரண்டு தூங்குவான் அவள் பெட் காப்பியுடன் வந்து எழுப்பினால் தான் முத்தத்துடன் காப்பி குடிப்பான் நினைவு மைக்கலைச் சுற்றிபடர,

எழும்பு அக்கா இந்தா முட்டைக் கோப்பியை குடி என்று தேவியிடம் தங்கை சாந்தா கப்பை நீட்டினாள். தேவி வாங்கும் போது என்ன அக்கா முகம் வீங்கிக் கிடக்கிறது அழுதியா என்று பதறிப்போய் கேட்டாள்.

இல்லையே...?

சுமனின் கடிதங்கள் ஒரு மாதகாலமாக நாடடுப் பிரச்சனைகளால் வரத் தாமதித்த நாட்ககளில் அவற்றை புரிந்து கொள்ளாத மஞ்சுளாவும் முகத்தை தலையணையில் புதைத்து தினமும் அழுது முகம் வீங்கி இருக்கும். 'எய் மஞ்சு மூஞ்சியைப்பார் அழுதனியே இல்லையே'?

'ஏண்டி பொய் சொல்லுகிறாய். முகத்தைப் போய் கண்ணாடியிலே பாரடி ஏன் தான் அழுகிறாயோ உன்ரை காதலுக்கு இன்னும் அல்லி வேர் கூட வைக்கேல்லையே, இது அவளின் நண்பிகளின் எச்சரிக்கை.

காரணத்தை மறைக்க முடிந்தாலும் பெண்களால் கண்ணீரை மறைக்க முடியாது என்ற உண்மையை அவள் பல தடவைகளில் புரிந்திருக்கிறாள்.

இந்தத தேவி மட்டும் புரியாமல் இருப்பாளா? 'என்ன மஞ்சு எழும்ப மனமில்லையா இந்தா ரீ' கூறிக் கெக்ண்டே சில்வர் ரம்ளரில் நிறைந்திருக்க ரீயை றூம் மேசையில் வனஜா வைத்துவிட்டு திரும்பினாள்.

தங்கியூ... பிளீஸ் வேண்டாம் வனஜா நான் பிறகு முகம் கழுவி விட்டு குடிக்கிறன் கூறிக் கொண்டு எழும்ப முயற்சித்தவளுக்கு இன்று ஒவ்பிஸ் இல்லை லீவு நாள் எனபது நினைவுக்கு வர மீண்டும் மழைக் காலத்திலுள் மனசைப் புகுத்தினாள்.

வெளிக் கேற்றைத் திறந்து கொண்டு தியாகு வருவது தெரிந்தது

தேவியின் இதயத்தின் ஒரு மூலையில் வலி கண்டது மஞ்சுளாவால் இந்தக் கதை எப்படி முடியும் என்று கற்பனை செய்யக் கூட முடியாமல் கதை விறு விறுப்பாக சென்று கொண்டிருந்தது.

கதை மட்டுமா? சில நாட்களாக மஞ்சுளாவின் இதயமும் அப்படித்தான் விறு விறுப்பாக துடித்துக் கொண்டிருந்தது

சில வேளை தேவி மீண்டும் தியாகுவை கல்யாணம் பண்ணப் போகிறாளோ ... ச்சி ... கேவலம்

"ஏண்டி இன்னும் மஞ்சு எழும்பவில்லை? அவளுக்கு செங்கை ஆழியானின் புத்தகம் என்றால் சொர்க்கமே

இது வீணாவின் குரல்

"இல்லையடி"

"சுமனை விடிஞ்சாப்பிறகும் படுத்திருந்து கனவு காண்கிறாள் போலும், இது வனஜா குரல்

"இரண்டுமே இல்லையடி அப்ப என்ன நேற்றைக்கு முதல் நாள் அவளுக்கு வந்த கடிதத்தில் சுமன் ஏதோ ஒப்பாரி வைச்சு எழுதி இனிமேல் கடிதம் எதுவும் போட வேண்டாம் என்று எழுதினதாம் அதுதான் அவளுக்கு கவலை" இது பிரிந்தாவின் குரல்.

மஞ்சுளாவுக்கு கோ வென்று கதற வேண்டும் போல் இருந்தது எச்சிலை மெண்டு விழுங்கியபடி உதட்டைக் கடித்துக் கொண்டு செவிகளைக் கூர்மையாக்கினாள்

"ஏனும் அப்படி சுமன் எழுதினவர் முன்பு எல்லாம் அவளின்ரை கடிதம் அடிக்கடி வேணும் இப்ப மட்டும் வேண்டாமாமோ ரூஸ்கல் .."

மஞ்சுளாவால் தொடர்ந்து கேட்க முடியவில்லை என்னதான் இருந்தாலும் சுமனை மற்றவர்கள் குறை கூறுவதை அவளால் பொறுக்க முடியவில்லை.

கண்களில் நீர் நிறைந்து தளம்ப அந்த கண்ணீர் தடாகத்தினுள் விழி இரண்டும் மீன்களாகத் துடி துடித்தது

கடவுளே மனம் என்பதை ஏன் இவ்வளவு மென்மையாகப் படைத்தாய் என்னால் மட்டும் ஏன் அந்த சுமனை ஏச முடியவில்லை என்றுமே தெரியாத யாரோ ஒருவன் தானே

அவ்வாறு அவளால் நினைக்கக் கூட முடியவில்லை சுமன்...... சுமன் உங்களை என்னால் புரிய முடியவில்லையே...

தேவி நீ உன் கணவரிடமிருந்து டைவோஸ் பெற்றுத்தான் வந்திருக்கிறாய் பிரிந்துதான் வந்திருக்கிறாய்.

யார் சொன்னது தியாகு?

எல்லாரும் பேசுகிறார்கள் உனக்கு ஒரு கடிதம் கூட உன் கணவரிடமிருந்து வரவில்லையாமே அதில் இருந்து தெரியாதா?

உலகமே இப்படித்தான் ஒருவரின் துன்பத்தில் அக்கறைப் படுவர்களை விட துயரங்களை விசாரிப்பவர்களே அதிகம்

ஏன் சுமனின் கடிதங்கள் வரவில்லை என்றதும் எப்படி எல்லாம் நான் துடியாய் துடித்த போது

"உனக்கு லெற்றர் வரவில்லையே?"

"ஏன்வரேல்லை முன்பு கிழமைக்கு இரண்டு வருமே இப்ப என்னவாம்"

அவளின் வேதனைகளை அதிகப்படுத்துபவர்களை எண்ணி எத்தனைநாள் குமைந்தாள்.

தேவியின் நிலையும் அப்படித்தான் இருக்குமோ. வெள்ளிக்கிழமை காலை அம்மா கேட்டாள் நல்லூருக்கு போய் வருவோமா தேவி

அக்கா அந்தா அதில போற நீலநைலெக்ஸ் சாறிக்காரியைப் பார்

அவள்தான் தியாகுவின் மனைவி

பெயர் துளசி

நல்ல அழகாய் இருக்கிறளே என் தியாகு டைவோஸ் பண்ணிவிட்டார்

நான் சொன்னல் கோபிக்கக்கூடாது அக்கா துளசியைக் கட்டியணைக்கும் போது தேவி தேவி என்று பிதற்றுபவனுடன் அவளால் எப்படி வாழ முடியும்.

தேவியின் இதயக் கதவுகள் பலமாகத் திறந்து அலைந்து மூடிக்கொண்டன.

மஞ்சுளாவின் கரங்கள் நடுங்கி கையில் இருந்த நாவல் நழுவி கீழே விழுந்தது.

பெண்கள்தான் இலகுவில் பலவீனப்படுகிறர்கள் என்றல் ஆண்களுமா? அல்லாவிட்டால் தனது பலவீனத்தை சட்டப்படியான மனைவி துளசியிடம் தியாகு காட்டுவாஞ சில நிமிடங்கள் மஞ்சுளா இனம்புரியாத உணர்வுகளால் தந்தளித்தாள்

மைக்கல்—சுமன்

தேவி—மஞ்சுளா

தியாகு உன்னை நான் யாரோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நீ...... நீ...... புரியாத பாத்திரம்

மஞ்சுளாவால் ஆர்வத்தை அடக்க முடிய வில்லை மழைகாலம் மீண்டும் கையினுள் நளின லயம் காட்டியது

நீ எதையோ இழந்தவள் மாதிரி தெரிகிருய் உன் கணவனிடமிருந்து ஒரு கடிதம் கூட உனக்கு வாவில்லை என் என்னிடம் மறைக்கிருய் மேலைத் தேசப் பழக்க வழக்க முன்னவர்கள் ஐந்தாண்டுகள் ஒரு மனைவி யுடன் வாழ்வதே பெரிய காரியம்

தியாகு... ..

தேவி வீரிட்டுக் கத்திஞள்

மஞ்சுளாவில் உடல் அந்தக் காலை வேளை யில் கூட அதிகமாக வேர்த் தொழுகியது உடலை விட உள்ளமே அதிகமாகப் புழுங்கிக் கொண்டிருந்தது.

மைக்கல் நீயும் ஒரு மனுசன் உன்னுலை அந்தப் பேதை தேவியின் அன்பை புரிய முடிய வில்லையா? சிட்டுக் குருவியைப் போல் மைனு வைப் போல் பெண்களின அன்பிற்கும் மெல்லிய சிறகு உண்டு எங்கோ அவள் படித் திருக்கின்ருள் அதை இபபோது நினைக்கும் போது அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

பெண்கள் எல்லாம் ஆண்களின் வேடிக் கைப் பொருள் என்று நினைத்து விட்டார்கள் போலும்

புத்தகத்தை வாசித்து முடிக்க மனமில் லாமல் படுக்கையை விடடு எழுந்து கதவருகே சென்ற மஞ்சுளா சில நிமிடங்கள் கதவருகே சிலையாகி நின்ற வண்ணம் புத்தகத்தை வெறித்துப் பார்த்தாள்.

ஏனே கதையின் முடிவு அறிய மனம் துடி யாய் துடித்தது அவனே தான் அதே மைக்கல்

டாடி என்று துள்ளினுள் தாமஸ்

தேவி தன்னை மறந்தவளாக ஒடிச் சென்ருள் மைக்கல் வேகமாக வந்து அவளைத் தழுவிக் கொண்டான். அவன் மார்பில் முகம்புதைந்து தேவி விம்மத் தொடங்கினள்.

மைக்கல் சிரித்தான் விசர் அது ஒரு ஒப்பந் தம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு மனைவி தேவை என்ற எண்ணத்துடன் தான் நானும் விளம் பரம் செய்தேன். அந்த ஏஜன்சி உன்னை நன்ருகப் பயமுறுத்தி இருக்கிறன்.

பைத்தியம் உன்னை விட்டிட்டு என்னல் தனிய ஜேர்மனியில் வாழ முடியுமா?

மஞ்சுளா நிம்மதியாகப் பெருமூச்சு விட் டாள் எவ்வளவு நல்லவர் மைக்கல்

மைக்கலைப் போல் சுமனும் என் அன்பை உணர்ந்து என்னிடம் ஒடி வந்தால் வார்த்தை களை மஞ்சுளா முடிக்கு முன்...

ச்ச்ச்...... பல்லி தென் கிழக்கு மூலையில பலமாக ஓசை எழும்பியது மஞ்சுளாவுக்கு பல்லிச் சாஸ்திரம் கை வந்தகலை எனவே

திசைகளை எண்ண ஆரம்பித்தாள் ஒன்று இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஒரு சண்டை உண்டாம் ஐந்து மஞ்சுளா பிரமை பிடித்தவளாக கட்டிலில் இடிந்து போய் இருந்தாள்

சுமன் உங்களை நான் நினைத்து வாழ்வதா இல்லை...... இல்லை ... மறப்பதா?

கண்ணீர் கன்னங்களில் கோலமிட அடுத்த றூமில் உள்ள வானொலியில்

'இரண்டு மனம் வேண்டும்
இறைவனிடம் கேட்டேன்
நினைத்து வாழ ஒன்று
மறந்து வாழ ஒன்று'

என்னும் பாடல் மஞ்சுளாவின் செவிப்பறையில் எதிரொலிக்க அவளின் உதடுகள் அவளின் அனுமதியில்லாமலே விரக்தியோடு புன்னகைத்தன.

---

## ஒரு எத்தியோப்பியக் கனவு

கலிஸ்ரா இராசநாயகம்
நோர்வே.

ஓ!
வறுமையே — உன்
வசதி பற்றி பாடியே — இவர்கள்
வசதியாளர்களானார்கள்.

உன் கவலைகளை
கடன் வாங்கி — உன்
பசிகளை
தொலைத்து விட்டார்கள்

இவர்கள் தான்...
போதைகளிற்கு காரணம் கூற
சோகங்களை
உற்பத்தி செய்பவர்கள் — பாவம்
நீ மட்டும்
காலியான பீங்கானுள்
சோற்றை தேட முயன்றபடி

உன்
எலும்புகளை எண்ணுவதாய்க்
கூறியே -- தங்கள்
விளம்பரங்களை
விற்பனையாக்கிக் கொண்டார்கள்

இவர்கள் வாங்கிய
துடைப்பக் கட்டைகள்
தெருப்புழுதியைக்
கலைக்கவா...

தழும்புகள் என்ன
தண்ணீரிலா தணியும்..,?
இல்லை
வாசிக்க வைத்து
நீ வசதியானாயா...?
புரிய வில்லை
ஆமாம்!
இப்படியெல்லாம்
இவர்களுக்கு
யார் கற்றுக் கொடுத்தனர்...!

இவர்கள் கனவுகளிலெல்லாம்
நட்சத்திரப்போர் மட்டும்
தலையணையுடன் தவழும்....

நீ.... உன்...
கனவுகளைக்
கட்டாயம் தற்கொலை செய்துவிடு
இல்லையேல்
அவர்கள் — உன்
வறுமைக்கு
வாழ்க்கை கொடுத்து விடுவார்கள்.

# புதியயுகத்திற் பெண்கள்

எஸ். பி. கே.
சாவகச்சேரி

1980—90 பெண்கள் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ள ஒரு தசாப்தம். முக்கியமாக அரசியலில் அவர்கள் பெரிதும் எழுச்சியடைந்தனர். பதினைந்து ஆண்டுகாலம், அரசியலில் ஒளிவீசிய இந்திரா காந்தியின் துர்ப்பாக்கிய கொலையுடன் இச் தசாப்தம் ஆரம்பித்த போதிலும் 1986 இல் மற்றொரு குடும்பப் பெண் கொராசின் அக்குயினோ, சர்வதிகார ஆட்சி நடாத்திய ஃபேர்டினனட் மார்கோஸை தோற்கடித்து பிலிப்பையின்ஸ் நாட்டின் தலைவியானபோது பெண்ணினம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் தென்னாபிரிக்காவின் நிறவெறி ஆட்சியை எதிர்த்துப் போரிடும் நெல்சன் மண்டேலாவின் மனைவி, பல ஆண்டுகள் தடைக்குப் பின்னர் ,விடுதலை பெற்றார். தொடர்ந்து போராட்ங்களில் ஈடுபட்டார். இவள் கணவர் கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக சிறையில் இருந்து சமீபத்தில் விடுதலை பெற்றார். கணவன் செய்த பணியை மனைவி தொடர்ந்து ஆற்றி வந்தபோது இனவெறி வெள்ளையர் அரசு வின்னி மண்டெலா அரசியலில் ஈடுபடக்கூடாதென்றும், அவர் வாழ்ந்த நகரைவிடடு வெளியேறக் கூடாதெனவும்தடை விதித்தது.

இருபதாம் நூற்றாண்டில்,பிரிட்டனின் முதல் பெண் பிரதமரான மாகிரட் தட்சர் பத்தாண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் இருக்கிறார். இவர் ஆட்சியில் பிரிட்டனின் பொருளாதாரக் கொள்கை முக்கிய திருபபம் கண்டது. பிரிட்டிஸ் தென் அத்திலாந்திய ஃபோல்க்லண்ட் தீவுகளில் 1982இல் ஆர்ஜென்ரீனாவின் ஆக்கிரமிப்பை முறியடிக்க தட்சர் எடுத்த நடவடிக்கைகள், அவரை ஒரு தேசிய வீராங்கனையாக உயர்த்தி வந்தது.

பிரிட்டனில் இரு அரச திருமணங்கள் இடம் பெற்றன. டயானா ஸ்பென்சர் வேல்ஸ் இளவரசியானாள். சரா ஃபேர்குசன் டியூக் இளவரசரை மணந்து அலங்கார உலகில் புதுமை படைத்தாள்.

அறிவியல் துறையில், விண்வெளி ஷட்டில் சலெஞ்சர், தொழில் நுட்ப பிரச்சினை காரணமாக , செயலிழந்தபோது, ஆசிரியையும், விண்வெளி வீராங்கனையுமான கிரிஸ்ரா மெய்க் அஃலிவ், மின்பொறியியலாளர் ஜூடித் நெஸ்னிக் இருவரையும் ஜனவரி 1986 இல் இழக்க நேர்ந்தது துன்பகரமானது. எனினும் இச் தசாபதத்தின் தொடக்கததில் மற்றொரு விண்வெளி வீராங்கனை வெற்றியை ஈட்டினாள். சாலிறைற், அமெரிக்காவிலிருந்து விண்வெளிக்குச் சென்று திரும்பிய முதற் பெண்மணி ஆவாள்.

1988 பெண்களுக்கு ஓர் பொன்னான ஆண்டாகப் பிறந்தது. முஸ்லிம் உலகில் முதற் பெண் பிரதமராக பெனாசிர் பூட்டோ தெரிவு செய்யப்பட்டார். பாக்கிஸ்தானின் பதினொரு ஆண்டுகால இராணுவ ஆட்சி முடிவுற்றது.

''இது பெண்களுக்கோர் பெரிய நாள். இஸ்லாமிற்குச் சிறந்த நாள் அதிலும் மேலாக பாக்கிஸ்தானுக்கு ஓர் உயர்ந்த நாள்''

இவ்வாறு பிரதமரான பெனாசிர் தன்முதல் உரையின் போது சொன்னார். பெனாசிர் பூட்டோ முப்பத்தாறு வயதில், ஒரு பெரும் நாட்டின் இளம் தலைவர்.

1988இல் அமெரிக்க பெண்மணி கேர்றூட் எலியொண் (மற்றிருவருடன் இணைந்து)

'எயிட்ஸ்' உட்பட சில புதிய நோய்களுக்கு புதிய மருத்துவ அணுகு முறைகளைக் கண்டு பிடித்தமைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டார்.

ஃபுளோரன்ஸ் கிரிபித் ஜொய்னர், விளையாட்டுத்துறையில், இரண்டாவது தடவையும் தங்கப்பதக்கத்தை பெற்றுர்—1988 சியோல் ஒலிம்பிக்களததில் 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முன்னைய உலகசாதனையை முறியடித்து வீராங்கனையாக எழுந்தார்.

1988 பெப்ரவரியில், ஐ.நா. மன்றம் வெளியிட்ட அறிக்கயின்படி, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதாரத் திறகு பெண்கள் பெரிதும் உதவுகிருர்கள், 80 வீத உணவை பெண்களே உற்பத்தி செய்து சந்தைப்படுத்துகிருர்கள்.

கனடா நாட்டின் பொது நிர்வாக சேவையில் இன்று ஆண்களைவிட பெண்கள் அதிகம் உள்ளனர் என்று கனடா மகளிர் நிறுவன தொடர்பதிகாரி திருமதி மொரீன் ஓ நீல் கூறுகிருர்.

ஒரு தசாப்தம் முடிவடைந்த 1990 ஆம் ஆண்டுடன் ஒரு புதிய யுகம் பிறக்கும் வேளை பெண்கள் சமத்துவததில் புதிய வண்ணத் தொடுவானம் தெரிகிறது. பெண்கள் விவகாரங்களில் துரித முன்னேற்றத்திற்கான நிழல் தெரிகிறது.

மகிழ்ச்சிக்குரிய இக் காலகட்டத்தில் பெண்ணடிமை பற்றியே பேசியும், எழுதியும் வருவது பெண்களின் தாழ்வு மனப்பான்மையே உணர்த்துகிறது. கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் ஈழத்துப் பெண்கள் சமத்துவத்திற்கும் மேல் சென்றுவிட்டனர் என்ருல் மிகையல்ல.

---

## தேடல்

கைதை
''நளா-தேவா''

ஓ சீதைகளைத்
தேடுகின்ற சீலர்களே
நாங்கள் மட்டும்
இராமர்களைத்
தேடவில்லை ஏனென்ருல்
நாமும் தீக்குளித்தே
எமமைத் தரத்திறம்
உறுதி செய்யத் தேவை
இல்லை, இல்லை!
தயாரும் இல்லை!

## பூவையர் போராட்டம்

வண்ணை தவநேசன்

பூவோடும் பொட்டோடும்
வாழ்வதற்கு
இவள் பொல்லாத
போராட்டம் நடத்துகின்ருள்
ஏன்? இவள் நடத்துகின்ருள்
சீதனச் சந்தையில்
சீர் கெட்ட வாலிபர்
செய்திடும் ஆராஜகத்தை
எதிர்த்து போராடும்
தமிழ் பெண்ணின் போராட்டம்.
புது பொலிவு பெறுவது
எப்போ?

# மிகத் தொலைவிலல்ல; எம் வேலிக்கு அருகே!

ஆண்டாண்டு தோறும் கொண்டாடப் படும் சர்வதேச மகளிர் வார நிகழ்வுகள் ஆரம்பமாகிவிட்டன. 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ம் திகதிய நிகழ்ச்சி பற்றி 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி தொடங்கியே சிந்திப்பவர்களும் எம் மத்தியில் இல்லாமலில்லை. திரும்பத்திரும்ப, 'உரிமையைத் தாருங்கள்; அடக்கப்படுகிறோம்; பெண்ணின் பெருமைபற்றி; பெண் கல்வி உரிமைபற்றி; தொழில் பாரபட்சம் பற்றி, இது ஓர் ஆண்களின் உலகம், ஆனால் நாம் விரைவில் மாற்றிக் காட்டுகிறோம் பார் ......... ''

வருடா வருடம் இதே பல்லவி தானா?

'பெண்பிள்ளைகளுக்கான ஆண்டு - 1990' (year of the Girl Child - 1990), YGC எனப்பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வாண்டிலே, எம்மைச் சுற்றி எமக்கு மிக அருகிலே ஒரு கூட்டம் இருக்கிறதே, அதன்மேல் எமது பார்வையைச் சற்றுத் திருப்புவோமாயின் எம் சிந்தனை, குறிக்கோள்கள், மனப்பாங்கு செயற்பாடு என்பவற்றில் பாரிய மாற்றத்தைக் காண்போம். பல்வேறு காரணங்களுக்காக பலதரப்பட்ட தேவைகளுடன் இருக்கும் எம் பெண்பிள்ளைகள் பலரின் நிலைமை ஆராய்ச்சிக்குரியது. இவர்கள் யார்? எங்கிருக்கிறார்கள்? இவர்கள் தேவைகள் என்ன? இவர்களுக்கு என்னத்தை எப்போது எப்படிச் செய்யவேண்டும் என்பதில் எமது கவனத்தைச் சற்றுத் திருப்புவது இக்காலத்திற்கு மிகப்பொருத்தமாயிருக்கும்.

1. தன் சொந்த வீட்டிலேயே பாதுகாப்பின்றித் தவிக்கும் பெண்பிள்ளை.
2. வீட்டாரால் புறக்கணிக்கப்பட்ட பெண் பிள்ளை.
3. வீட்டை விட்டுத் தானாகவே வெளியேறிய பெண்பிள்ளை.
4. பெற்றோரிருந்தும் அவர்களுடன் வாழ முடியாமல் பாதுகாப்பு, கல்வி, பொருளாதார, குடும்பப் பிரச்சினைகளினால் பிரிந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட பெண்பிள்ளை.
5. பிறவீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டு எதுவித கேள்வியுமின்றித் துன்புறுத்தப் படும் பெண்பிள்ளை
6. அநாதையாகப் பெண் இல்லங்களில் வாழும் பெண் பிள்ளை.
7. கல்வி கற்கும் ஆற்றலிருந்தும் அதற்கு வாய்ப்பின்றியிருக்கும் பெண்பிள்ளை.

**குணேஷ் பரராஜசிங்கம்**

8. கண்டு பிடிக்கப்படாத வியாதிகளுடன் வைத்திய சாலைகளில் பலகாலமாகத் தங்கியிருக்கும் பெண்பிள்ளை.
9. பலவித ஊனங்களையுடைய பெண்பிள்ளை
10. பிச்சை எடுத்து, தெருக்களில் வசிக்கும் பெண்பிள்ளை.

இவர்களின் தேவைகள், ஏக்கங்கள் எதிர்பார்ப்புகள் அபிலாஷைகள் என்பன பற்றிய சிந்தனையே எம்மகளிர் உள்ளங்களில் முக்கியமாக இக்காலகட்டத்தில் இடம் பெற வேண்டும். இது எங்கள் பொறுப்பு, இவர்களை வாழ வைக்கும் திட்டங்களே முக்கிய செயற்பாடாக இருக்க வேண்டும்.

இப் பெண்பிள்ளைகள் சிலருடனாவது பேசிப் பார்த்தால், இவர்களுக்கேற்பட்ட அநுபவங்கள், தாக்கங்கள், உளவியல் பாதிப்புகள் யாவும் நன்கு புலனாகும்.

* 18 வயதிருக்கும். வெறித்த பார்வை கேள்வி கேட்ட மாத்திரமே தன் முகத்

தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள். ஆனால் அவள் பார்வையே அவளுக்காகப் பேசியது.

* தான் ஏன் தன் பெற்றோரை விட்டுப் பிரிக்கப் பட்டேன் என்று புரியாமல் நிற்கும் 8 வயதுச் சிறுமி.

* பெற்றோரைப்பற்றிக் கேட்டவுடன் வெட்கத்துடன் குழம்பிய நிலையில் காணப்பட்ட 13 வயதுச் சிறுமி "அப்பா கணக்காளர் சுட்டுக் கொல்லப்பட்டார், அம்மா என் தங்கையையும் (11 வயது) விட்டுவிட்டு யாருடனோ ஓடி விட்டாள் ...... யாருக்கும் சொல்லாதேங்கோ அம்மா."

* ஒரு 18 வயதுப் பெண்பிள்ளை கேட்கிறாள். "ஏன் என்னிடம் இத்தனை சரிசனையாகக் கேள்விகள் கேட்கிறீர்கள், யாரும் என்னைப் பெண் கேட்டார்களா?"

* இன்னொரு அதே வயதுப் பெண்ணின் ஏக்கம், "அகதி என்று பெயரெடுத்த எம்மை யார் திருமணம் செய்வார்கள்? இதுதான் எங்கள் சமாதி"

* என் தம்பி எங்கே? என்று தேடும் இரண்டு ஆண்டுகள் முன்பு பெற்றோர் சகோதரன் யாவரையும் இழந்த 13 வயதுச் சிறுமி

* தன் குடும்பப் பெருமை, தான் வாழ்ந்த விதம் பற்றியே என்நேரமும் பேசிக் கொண்டு மற்றையோர் கவனத்தையும் வேண்டி நிற்கும் சிறுமி.

* ஒரு தலையணையை அரவணைத்தபடி "அம்மா அம்மா" என்று கூப்பிட்டுத் திரியும் ஒரு சிறுமி.

* ஒரு 7 வயதுச் சிறுமி கூறுகிறாள். "என் அம்மாவைப் போல, எல்லாருடைய அம்மாக்களும் சாகவேணும்"

* சீதனம் சேர்க்க வெளிநாடு சென்ற அம்மா எப்போ திரும்புவாள் என்று 3 ஆண்டுகளாக அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் 17 வயதுச் சிறுமி வைத்தியசாலையில் எரிகாயங்களுடன் பரிதாபமாக "என் எதிர்காலம் யார் கையில்?" என்று பார்வையால் கேட்கும் சிறுமி.

* தன் பாட்டி தாய் சகோதரி மூவரும் ஒரே நேரத்தில் கொல்லப்பட்டதால் "என்னைக் காப்பாற்றுங்கள்" என்று அனுதரவாய் கதறும் ஊனமுற்ற 16 வயதுப் பெண்பிள்ளை.

* தன் சொந்தத் தந்தையாலேயே கற்பழிக்கப்பட்ட சிறுமி

* ஆயுதப் படையினரால் கற்பழிக்கப்பட்டு "இதைப் பார்க்கிலும் நான் இழப்பதற்கு என்ன இருக்கிறதம்மா?" என்று கேட்கும் 18 வயதுப் பெண்பிள்ளை.

* "காலை 4 மணியிலிருந்து ஓயாமல் இரவு 11 மணி வரை வேலை செய்கிறேனே, சரியாக உணவு கூடத் தருகிறார்களில்லையே அடிக்கிறார்களே" என்று அழும் 14 வயது மதிக்கத்தக்க பெண்.

* "நான் கீழ்ச் சாதியாம், அதுதான் எங்களையெல்லாம் பிரித்துப்போட்டிருக்கிறார்கள்" என்று தங்களுக்குக் காட்டும் பாரபட்சத்தைக் கூறும் 10 வயது நிரம்பாத பெண்பிள்ளை.

இவர்கள் போன்று இன்னும் பலர்! இத்தகைய பிள்ளைகள் ஒவ்வொருவரின் நிலைமையையும் தனித்தனியாக ஆராய்ந்து இவர்களது அடிப்படைத் தேவைகளாகிய அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, வருங்காலத்திற்கு ஒரு உத்தரவாதம், சமுதாயத்தில் ஒருவராகக் கணிப்பு போன்றவற்றை இவர்களுக்கு உறுதிப்படுத்தும் வரை பெண்பிள்ளைகளுக்கெனப் பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வாண்டு இவர்களுக்கு எவ்வித கருத்துமற்றதாகும். வ் நம் சர்வதேச மகளிர் தினங்களில் இவர்களும் உரிமை கேட்க வேண்டாமா?

இந்த நம்பிக்கையை, உறுதியை இவர்களுக்கு யார் தருவார்? □

போராட்ட காலத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்குப் 'புனர்வாழ்வு':

# ஓர் தேசிய ஆணைக்குழுவின் அவசியம்

*திருமதி பேனடீன் சில்வா*
**Ms. Bernadeen Silva**
துணை இயக்குநர்
சமயசமூக நடுநிலையம்

தமிழில்:
சரோஜா

எமது நாட்டில் இன்று நிலவிவரும் வன்முறையான சூழலின் தோற்றப்பாட்டில் ஆண் பெண் ஆகிய இருபாலாரையும் பொருத்திப் பார்ப்போம். கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டில் பல்வேறு குழுக்களினால் நடத்தப்பட்டுவரும் பல்வகை வன்முறைச் சம்பவங்களினால் கூடுதலானபாதிப்பு ஆண்களைவிடப் பெண்களுக்கே ஏற்பட்டுள்ளது. இளைஞர்கள் பயங்கரவாத இயக்கங்களில் அல்லது விடுதலைப் போராட்ட இயக்கங்களில் இணைந்து பாதுகாப்புப் படையினரால் கொல்லப்படும்போது, தடுத்துவைக்கப்படும்போது அல்லது அவர்கள் எந்தச் சுவடுமின்றி காணாமற் போகும் பொழுது யார் அதிகமாகக் கவலைப் படுவது? இந்நிலையில் அநேகமான சூழ்நிலையில் மனைவியோ அன்றி தாயாரோ அக்குடும்பத்தின் சுமைகளைத் தாங்கிச் செல்ல வேண்டியுள்ளது. சில கிராமங்களில் 50% ற்கு மேற்பட்டவர்கள் விதவைகளாக உள்ளனர். சில கிராமங்களில் தாய்மாரும் பெண்ணும் தமது காணாமற்போன கணவன்மாரையோ அன்றி சகோதரர்களையோ தேடுவதில் தமது சக்தியை செலவழிக்கின்றனர்.

நான் அண்மையில் சந்தித்த ஓர் அபலைப் பெண்ணின் சோகக் கதையினைக் கூறுகின்றேன். அப்பெண் மிகவும் கவலையுடன் கூறிய வார்த்தைகள் – அம்மா, நான் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், பாதுகாப்பு படையினர் முகாம்களுக்கும், அகதிகள் முகாம்களுக்கும், எனது மகனைத் தேடிச் சென்று களைத்துவிட்டேன். அங்கு அவர்கள் ஓர் பட்டியலை எடுத்துப் பார்த்துவிட்டு 'இல்லை' என்றுகூறி ஒன்றில் கலைத்துவிடுவார்கள் அல்லது கடுமையான வார்த்தைகளில் பேசுவார்கள். ஒரு காவல் நிலையத்தில் 'இங்கே வந்து எங்கள் நேரத்தை வீணுக்க வேண்டாம். உனது மகன் பிடிபட்டிருந்தால் அவன் நிச்சயமாக ஒரு பயங்கரவாதியாகத்தான் இருப்பான். ஆகவே அவன் கொல்லப்படக் கூடியவனே. அவ்வாறான ஒரு மகனைப் பெற்றெடுத்ததற்கு நீ கவலைப்பட வேண்டும். எப்படியா மகனை வளர்ப்பது?' என்று கேட்டனர். அதற்கு அவள், 'நான் என் மகனை மிகவும் கஷ்டப்பட்டு அன்புடன்தான் வளர்த்தேன். அவன்

நல்லவனோ, கெட்டவனோ என்பது பிரச்சினையல்ல. அவன் என் மகன். ஆகவே தயவு செய்து அவன் இங்கு இருக்கின்றானா என்பதனைக் கூறுங்கள்' என்றாள். சில பெண்கள் தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கின்றார்களா என்பதனை அறிவதற்கு சாஸ்திரம் பார்ப்பதிலும், கோவில்களில் ஏறி இறங்குதிலும் தமது பணத்தையும், நேரத்தையும் செலவழிக்கின்றனர். இதன்மூலம் தமது பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் ஓர் திருப்தியினையும் நம்பிக்கையினையும் அடைகின்றனர். ஆனால் இந் நம்பிக்கையில் துன்பமான இழைகளை தாய் ஒருவர் மட்டுமே உணர்வாள். இப்படியான நிகழ்வுகள் கணக்கிலடங்காதவை. இதனால் இன்று இவ்வாறான துன்பங்களுக்கு டலர் பழக்கப்பட்டவர்களாகி விட்டனர்.

இன்னோர் சம்பவம், சமிர்புர என்ற கொழும்பிலுள்ள ஓர் சிறு ஏழைக் குடியானவர் வசிப்பிடம். அக் குடும்பத் தலைவன்—ஒரே உழைப்பாளி இறந்து விடுகின்றார். (இயற்கை மரணம்) தாயாரும் இரண்டு பெண் பிள்ளைகளும் அனாதரவான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் இரண்டு பெண்களின் கணவன்மாரும் தடுப்புக் காவலில் உள்ளனர். அவர்களுக்கு உழைப்போ இல்லை எப்படியோ கஷ்டத்தின் மத்தியில் அவர்களது நான்கு பிள்ளைகளுடன் இப் பெண்கள் காலத்தைக் கழிக்கின்றனர்.

நான் இக் கதைகளை எனது நண்பர்களுக்குக் கூறியபோது அவர்கள் இல்லாததும், இதைவிட மிக மோசமானதுமான பல கதைகளை தாம் கேள்விப்பட்டுள்ளதாகக் கூறினர். ஓர் தமிழ் நண்பர் என்னிடம் கவலையாகக் கூறினார். நாம் இவ்வாறான துன்பங்களைப் பல வருடங்களாக அனுபவித்து வருகின்றோம். இது எமக்கு தொடர் கதை போன்ற நிகழ்ச்சியே என்றனர்.

ஓர் பொலிஸ் துறையினர் இறந்தாலோ அன்றி காவல் துறையினர் இறந்தாலோ மனைவிமாருக்கு நஷ்டஈடு வழங்கப்படுகின்றது. ஆகவே இவர்களுக்கு ஒரு வகையில் வாழ்க்கையில் பொருளாதாரக் கஷ்டம் ஏற்படுவதில்லை. ஆனால் இவ் வழியில் சிந்திப்பதனால் ஒரு பெண்ணின் சுமைகள் எந்த வகையிலும் குறைக்கப்படுவதில்லை மேலும் இன்று நாட்டில் எத்தனையோ இளம் பெண்கள் விதவைகளாக்கப் ட்டு, எந்த நஷ்டஈடுமின்றி உள்ளனர். ஓர் இளம் பெண்ணின் கணவன் கண்ணி வெடியில் சிக்கி இறந்தான். அவளினால் எந்த நஷ்டஈட்டினையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏன்? அவளினால் தமது விவாகப் பதிவுச் சான்றிதழினை சமர்ப்பிக்க முடியவில்லை நஷ்டஈட்டிற்குத் தகுதியான பலநிபந்தனைகளை பல பெண்களினால் சமர்பிக்க முடியாமல் இருக்கலாம். ஆயினும் இவ்வாறு பெறப்படும் பணம் ஒன்று அல்லது இரண்டு லட்சமாக இருந்தால்கூட அது அவளது வாழ்வுக் காலத்துக்குப் போதுமானதா?

குடும்பங்கள் துரத்தப்பட்டு நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் அகதி முகாம்களுக்கு தள்ளப்படும்போது அன் துயரத்தினையும், மனிதாபிமானமற்ற முறைகேடுகளையும் அனுசரிப்பவள் பெண்ணே. உடை மாற்றுதல, பிள்ளைக்குப் பால்கொடுத்தல், போன்றன பெண்ணிற்குச் சிரமமானவையே. அகதி முகாமிலிருந்த பெண்ணொருவர் என்னிடம் கூறினார், பருவமடைந்த இரு பெண் பிள்ளைகளையும் கவனமாகப் பார்க்க வேண்டியிருந்ததில்தான் அங்கு இரவில் நித்திரையே கொள்வதில்லை என்று இவ்வாறான சகல துன்பங்களும் பெண்களையே சாருகின்றன.

இது மட்டுமா, எம்மால் கற்பனைசெய் செய்ய முடியாத அளவிற்குப் பெண்களின் துயரங்கள் இன்று தலையெடுத்துள்ளன. நீங்கள் பாசம் காட்டிய ஒருவரின் சிதறடிக்கப்பட்ட உடலைக் காண்பது, தலையற்ற முண்டங்கள் வீதிகளில் அனாதரவான நிலையில் போடப்பட்டுள்ளமை, சடலங்கள் ஆற்று நீரோடு அடித்துச் செல்லப்படுதல், சில மனித உடல்கள் துண்டு துண்டாகப் பொலிதின் உறைகளில் போடப்பட்டுள்ள நிலையை விட ஒருவருக்கு வேறு ஏதாவது துன்பம் ஏற்பட முடியுமா? நஷ்டஈடு என்பது ஓர் தற்காலிக நிவாரணமாக இருக்க முடியுமே தவிர, இக்கொலைகள், காணாமற் போதல் போன்ற விடயங்களுக்கான தீர்வு

தேவையானதும், நீண்ட ஆய்விற்கு அப் பாற்பட்டதுமாகும்.

இன்று எமது நாட்டில் ஆயிரக்கணக் கான பெண்கள் தமது மகன், கணவர்களை இழந்த நிலையில் தனியாக தமது குடும்பப் பொறுப்பை நடத்த வேண்டிய நிலையிலுள் ளனர். ஜனசவிய திட்டம் கூட அவர்களுக் குதவுவதாக இல்லை. இளைஞர் பிரச்சினைக் கான ஆணைக்குழுவின் தீர்மானங்களும் இவர் களில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்த வில்லை. சிறிய அளவிலான கைத்தொழில் முயற்சிகளும், அரசாங்கத் தேசிய அபிவி ருத்தித் திட்டங்களும் இவர்களைத் தொட் டதாக தெரியவில்லை. இவை யாவற்றிற் கும் காரணம், ஆண்களினால் தொடக்கப் பட்டு, கட்டவிழ்க்கப்பட்ட வன் முறைகளி னால் ஏற்பட்ட அழிவுகளே

ஆண்களினால் தொடக்கப்பட்டதென ஏன் நான் கூறுகின்றேன் எனில், பெண்கள் விரும்புகின்றாரோ இல்லையோ, எமக்கு வேண்டுமோ வேண்டாமோ போர், பிணக் குகள், பயங்கரவாத நடவடிக்கைகள் யாவும் ஆண்களாலேயே உருவாக்கப்படுகின்றன. நாட்டின் பாதுகாப்பிற்காக பிரசைகளின் பாதுகாப்பிற்காக எனக் கூறப்படும் ஆயு தம் தாங்கிய காவலர்கள், பொலிசார் போன்றவர்கள் பெண்களையே பழிவாங்கு கின்றனர். காவல் படையினர் பெண்களைக் கற்பழிப்பது போன்ற விடயங்கள் பரவ லாகத் தெரிந்த விடயங்களே. அறுபத்தி யெட்டுப் பாதுகாப்புப் படைவீரர்கள் பொலிசார், அலுவலர்கள் உட்பட கடந்த ஒரு வருடத்தில் கற்பழிப்பு, கொலை, போன்ற காரணங்களுக்காக சிறைச்சாலை யில் தடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளனர். (சண் பத்திரிகை 16.2.90)

இவ்வருடம் நாம் 42 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம். ஆனால் இத் தொண்ணூறாவது தசாப்தம் எமக்கு எதனைக் கொடுத்திருக்கிறது. இந்நாடு வன் முறையினால் மிகக் கொடூரமாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இன்று குறிப்பாக பெண்களா கிய நாம் உண்மையில் சுதந்திரமாக உள் ளோமா? எமது தாய்மார் பிள்ளைகளை வளர்பதற்காக, விபச்சாரம் செய்யும் போது நாம் சுதந்திரமாக இருக்கிறோமா? எமது பெண்கள் இரவில் தனியாக வீதிகளில் நட மாடுவதற்கு பயந்த நிலையில் எமக்கு சுதந் திரம் கிடைத்துள்ளதா? எமது இளம் பெண்கள் கற்பழிப்பின் பயத்தினால் நடமா டும்போதும், ஆயுதம் தரித்த படைவீரர் கள் வீடுகளுள் நுழையும்போதும், இளைஞர் களைத் தேடும்போது பெண்கள், மனைவிமார், தாய்மார் கேட்கும் அவலச் சொற்கள் எமக்கு சுதந்திரத்தையா கொடுத்துள்ளது? வெளிநாடுகட்கு பணிப்பெண்களாக சென் றுள்ள சுமார் 100,000 பெண்களுக்கு ஒரு சிறியளவு பாதுகாப்பே வழங்கப்பட்டுள்ளது. சுதந்திர வலயத்தில் தொழில் பார்க்கும் சுமார் 50,000 பெண்களுக்கு தொழிலாளர் என்ற ரீதியில் எவ்விதமான திருப்தியான பாதுகாப்பு நிலைமைகளும் அவர்கள் உரி மைகளை பாதுகாப்பதற்கு ஏற்படுத்தப்பட வில்லை. இப்பெண்கள் யாவரும் சமூகத்தின் அநீதியான பல்வேறுவகை முரண்பாடுக ளின் குற்றவாளிகளா அன்றி நாடளாவிய அரசியல் போராட்டத்தின் விளைவினால் உரு வாகிய குழப்ப நிலையின் குற்றவாளிகளா?

இன்று அதாவது போராட்டங்களினால் குற்றவாளிகளாக்கப்பட்ட பெண்களுக்கு ஓர் தேசிய ஆணைக்குழு அவசியம் தேவையான தாகும். இது எமது நாட்டின் பிரச்சினை யாக உள்ளதினால் ஓர் தேசியப் பிரச்சினை யாகும். இப் பெண்களுக்கு புனர்வாழ்வளிப் பதன் மூலம் முழுமையான ஓர் சுதந்திர இலங்கையினை உருவாக்க முடியும். □

# நிபந்தனை

— எஸ். பி. சிவனேஷ்

எதிர்பார்த்திருக்க முடியாத வார்த்தைகளை அவன் சொன்ன போது விஜயா திகைத்துப் போய் விட்டாள். அவளது சிந்தனைக்கு மூச்சுத் திணறியது. வார்த்தைகளுக்காக வளைய சக்தியற்றுப் போய் விட்ட நாக்கு செத்துக் கிடந்தது. சில கணத் திணறலிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்ட அவளது சிந்தனை ''கோபாலா இப்படிச் சொல்கிறார்?'' என்று மெல்ல ஏக்கப் பெருமூச்சை விட்டது.

காதல் அத்தியாயத்தின் இரண்டு வருட கால நிகழ்வில், ஒரு மணித்துளியில் தன்னும், அத்தகைய வார்த்தைகள் அவனது வாயிலிருந்து வரமுடியும் என்று அவளால் ஊகித்திருக்கக் கூட முடியாது. அந்தளவிற்கு அவன் மேல் அவளுக்கு பரிபூரண நம்பிக்கை இருந்தது. அத்தகைய அவளது நம்பிக்கைக்கு அடித்தளமே, அவன் தன்னில் வெளிக் காட்டிய பண்புகள் தான். கோபால் எப்போதும் முற்போக்காளனும்ப் பேசியவன். ஆண் பெண் சமத்துவத்தை ஆதரிப்பதில் ஆணித்தரத்தைக் காட்டியவன். அதன் மூலம் அவன் மேல் ஏற்பட்ட மதிப்புணர்வு அபிமானத்திற்கும் அதிலிருந்து காதலிற்கும் நம்பிக்கைக்கும் பரிணாமம் விஜயாவிடம் சுளுவாக நடந்தேறி விட்டது.

காதலிலும் கூட கோபால் கண்ணியத்தைத் தான் வெளிப்படுத்தினன். விஜயாவின் நேசிப்பிற்கீடான நேசிப்பை அவள் மேல் தானும் கொண்டுள்ளான் என்பதில் ஐயத்தை ஏற்படுத்தும் படியான சந்தர்ப்பம் எதற்கும் அவன் வழி விட்டதில்லை.

அத்தகைய ஒருவனை விட்டு வேறு ஒருவனைத் திருமணம் செய்துகொள்ள விஜயாவால் இயலுமா? ஆனல் அவளது காதலை அறிந்து கொள்ளாத பெற்றேர் அவளுக்கு வேறு திருமண ஏற்பாட்டைச் செய்யும் முயற்சியில் தான் இறங்கினர். அது பற்றிய கருத்தறிதல் அவள் முன் வந்த உடனேயே மறுதலித்தாள். இந்த நிலையில் தன் காதலைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய தேவை அவளுக்கு வந்து விட்டது. ஆனல், எந்தப் பெற்றேர்களால் பிள்ளைகளின் காதலை உடனடியாக ஆமோதிக்க முடியும்? வழமை போல அவர்களாலும் ஆட்சேபனையைத் தெரிவிக்கத் தான் முடிந்தது ஆயினும் அவளிடமோ தளராத பிடிவாதம் இருந்தது. இந்த நிலையில் அவளது வீடு காரசாரமான விவாதத்தில் இரண்டு நாட்களாய் நிறைந்து விட்டது. எத்தனையோ திட்டுக்கள்; எத்தனையோ உள்மன அவஸ்

தைகள். அத்தனை இடர்பாடுகளின் மத்தியிலும் கூட அவள் உறுதியாய் இவ்வாறே கூறி விட்டாள்: ''எனக்கு கலியாணமெண்டு நடந்தா, அது என்னோடை ஒபிஸில வேலை செய்யிற கோபாலோட தான் இல்லாட்டி கல்யாணம் கட்டாமலே நான் இருந்திடுறேன்.'' அதன் பின்னும் பெற்றோருக்காக 'சம்மதம்' என்ற ஒன்றைத் தவிர வேறு வழி எதுவும் திறந்திருக்கவில்லை. ஆனால், அவ்வாறெல்லாம் வெகு சிரமப்பட்டு ஒரு முன்னேற்ற கட்டத்திற்கு வந்தும் வெண்ணெய் திரண்டு வருகிற நேரத்தில் தாழி உடைந்து போன நிலையில் இருந்தது அவளது கதை

ஏற்கனவே நிகழ்ந்திருப்பவை போன்று, காதலிக்கும் வரை காதலித்துவிட்டு திருமணம் பற்றிய தீர்மானத்த்ன் போது ''இப்படி இப்படி சீதனம் தந்தால் தான் முடியும்'' என்றோ, ''அப்பா அம்மாவுக்கு விருப்பமில்லை அவர்கள் வார்த்தையை என்னால் மீறமுடியாது'' என்றோ கோபால் கூறி விடவில்லை. விஜயா திகைத்துப் போகும் படியாக அவனது வாயில் இருந்து உதிர்ந்த வார்த்தைகள் ஒரே ஒரு நிபந்தனையின் கோர்ப்பிற்கானவை மட்டும் தான் அந்த அவலட்சணமான நிபந்தனை இது தான்: ''கல்யாணத்திற்குப் பிறகு அவள் வேலைக்குப் போகக் கூடாது!''

அதனை சராசரி ஆண் ஒருவனது வாயால் கேட்டிருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதும் இருந்திருக்காது. ஆனால், கோபாலின் வாயால் கேட்கிறபோது விஜயாவால் திகைத்துப் போகாது இருக்க முடியுமா?

கோபாலின் ஆழ்மனதை அறிய முயலுபவளாய் அவள் அவனது கண்களில் ஊடுருவிப் பார்த்தாள். அவளது பார்வையில் திகைப்பைத் தொடர்ந்த குழப்பத்தின் சாயல் தோன்றியது அந்த நிலையிலேயே கேட்டாள், ''ஏன் கல்யாணத்துக்குப் பிறகு வேலைக்குப் போக வேண்டாமெண்டுறியள்?''

அதற்கு அவன் சொன்ன பதில்: ''அது அவ்வளவு நல்லதாப் படேல்லை எனக்கு''

அதனை அவன் சொன்ன போது வினுக்களை ஏற்கனவே தெரிந்து கொண்டு, நேர்முகத் தேர்வில் பதில்களைப் பட்டென்று கூறுபவனை ஒத்திருந்தான். ஆயினும் அது விளக்கத்திற்குப் போதுமானதாய் இருக்கவில்லை விஜயா மேலும் விசாரித்தாள், ''அதில என்ன பிரச்சனை?''

''என்ரை மனதுக்கு பிடிக்கேல்லை.''

''என்ன காரணமெண்டதைச் சொல்லுங் கோவன்!''

சொன்னான், ஏதேதோ காரணங்களை எல்லாம். இருவரும் சம்பாதிக்க வேண்டிய தேவை ஒன்றுமில்லை என்றான், இருவரும் வேலைக்குப் போனால் குடும்பத்தை சிறப்பாக கொண்டு நடத்த முடியாது என்றான்; குழந்தைகளோடு தாய் அதிக நேரம் தங்காவிட்டால் அவர்களது மனோநிலை பாதிப்படையும் என்று நியாயப்படுத்தினான்.

விஜயாவைப் பொறுத்தளவில் வேலையை விட்டு விடுவதென்பது அவ்வளவு சாத்தியமில்லை ஆண் சகோதரர்களின் ஆதரவறியா இரண்டு தங்கைகளுக்கும், தனக்கு கடப்பாடுள்ள பெற்றோருக்கும் அவள் தான் வாழ்நிலைக் கைத்தடி. அத்தகையவள் வெறுமனே காட்சிக்கு மட்டும் கைத்தடியாக இருந்து விட்டுப் போவது சரியாகுமா? அதனால் தன் எதிர்காலம் பற்றி ஏற்கனவே ஒரு திட்டம் வகுத்து வைத்திருந்தாள். தன் சம்பாத்தியம் தான் பிறந்த குடும்பத்திற்கு, புருஷனின் சம்பாத்தியம் தன் பிந்தைய குடும்பத்திற்கு.

தனது திட்டத்திற்கு கோபால் ஒத்துழைப்பு நல்கக் கூடியவன் என்று அவள் அபரிமிதமாக நம்பிக் கொண்டிருந்து விட்டாள். ஆனால் இப்போது தான் அவளை மறுதலிக்கிற; தன் நிபந்தனையில் 'மூன்று கால் முயல்'' கோபாலைப் பார்த்தாள். அவளது குடும்ப நிலை கோபால் அறிந்துகொள்ளாத விஷயமல்ல இத்தனை காலத்துள், பரஸ்பரம் மனம் விட்டுப் பேசுதலில் அந்த விஷயம் அவனுக்குத் தெரிந்துகொள்ள முடியாத படி எங்குபோய் விட முடியும்? 'பரஸ்பரம் மனம் விட்டு' என்கிறபோது விஜயா தன் பங்கிற்கு எவ்வித வஞ்சகமும் செய்யாமல்; மூடி மறைப்பில்லாதபடி அனைத்தையும் சொல்லி விட்டவள். கோபாலும் கூட நிறையச்

சொல்லியிருந்தான். ஆயினும், "பாவி! எத்தனை விஷயங்களை மறைத்திருப்பானோ?" அப்படி ஒரு சந்தேகம், விஜயா அவன்மேல் வைத்திருந்த நம்பிக்கையையும் பலவீனப்படுத்தி இப்போது அவளிடம் எழுந்திருக்குமாயின், அதனை அநியாயம் என்று சொல்வதற்கு எவ்வித நியாயமும் இருக்காது. அவனை முழுமையாய்த் தெரிந்து வைத்திருந்தும் கூட, அவன் பாதகமான நிபந்தனையைப் போடுகிறபோது, அத்தகைய சந்தேகம் அநியாயமானது என்பதற்கு எந்த நியாயம் இருக்கமுடியும்? ஆயினும் மனம் தளர்ந்து போய் விடாது, அவளால் அவனுக்கு எடுத்துச் சொல்லப்படக் கூடிய விஷயங்கள் இருந்தன ஏற்கெனவே இருவரும் பேசிப் பேசி அவர்கள் வரையில் புராதனமாகி விட்ட அந்த புதுமையான சங்கதிகள் தம்மை அவனுக்கு ஞாபகப் படுத்தும் தேவையை அவளுக்குச் சுட்டி நின்றன. அவள் தமக்கிடையிலான நெருக்கத்தின் அடித்தளம்பற்றி, இத்தனை காலமும் நெருங்கிப் பழகிய இருவரால் வாழப்படக்கூடிய மனமொத்த வாழ்வுபற்றி எல்லாவற்றையும் அவனிடம் திரும்பவும் சொன்னாள். தன் குடும்ப நிலையைப் பற்றியும் கூட மீண்டும் சொன்னாள். ஆனால், இப்போது அவனிடம் அவை எடுபடக்கூடியவையால் இருக்கவில்லை. "அவையெல்லாம் சாத்தியமற்றவை" என்பதைத்தான் முகக் கூறுகளில் காட்டிநின்றான். தன் நிபந்தனைக்கு உடன்பட்டால் மாத்திரமே திருமணம் நடக்க முடியும் என்று கண்டிக்கிற பாங்கில் பேசி நிறுத்தினான்.

அவன் எப்படி எதன் பொருட்டும் தனது நிபந்தனையைத் தளரவிடத் தயாராய் இல்லையோ, அதனைப்போலவே அவளும் எதன் பொருட்டும் தன் திட்டத்தை நழுவவிடத் தயாராகாத உறுதியுடன் இருந்தாள். கோபால் தனது நிபந்தனைக்குக் காரணங்களாகச் சொன்னவற்றின் அர்த்தங்கள் அவனளவில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆயினும் அவற்றை அவன் சொன்னதொனி இருக்கிறதே, அதனை வைத்து வெறும் பசப்பலிற்காகத்தான் அவற்றைப் பிரயோகிக்கிறான் என்பதை விஜயாவால் அப்போதே உணர்ந்துகொள்ள முடிந்தது. தொடர்ந்து அந்த உணர்வு நிலையின் உந்துதல் ஒன்றும் ஏற்பட்டது. இப்போதைய அவளது நிலையில் அத்தகைய உந்துதலானது அவளுள் இன்னும் இன்னும் முனைப்பூக்கம்பெற. அவளது சிந்தனை ஒருவித ஆய்வில் இறங்கியது. அதில் அவள் இவ்வாறாக எண்ணமிட்டாள்: 'அவன் சொன்ன விஷயங்களிலெல்லாம் உண்மையிலேயே அக்கறையுள்ளவனாக இருந்தால், ஏற்கனவே என்னுடன் விவாதித்து சிறந்ததொரு தீர்வுக்கு வந்திருக்க வேண்டும். இறுதி நிலையில் வந்து அப்படியொரு நிபந்தனையைப் போடுகிறவன் என்றால், அவனது நோக்கு என்பது தன் மனைவி வீட்டைத் தாண்டாத விலங்காய் இருக்க வேண்டும் என்பதைத் தவிர வேறெதுவுமாக இருக்கமுடியாது"

தன் சில கணச் சிந்தனையின் பின்விளைவாய் கோபாலின் உள்முகம் பற்றிய கணிப்பொன்றிற்கு அவளால் வரமுடிந்தது. "கணவனுக்கு ஆதரவாய் குடும்பத் தேரின் மறுவடத்தைப் பிடிக்கக்கூடியவளை -- தன் எதிர்கால மனைவியை ஆலோசனைக்கு அழைக்காமல் புறக்கணித்தவன், இத்தனை காலமுமாய் சமத்துவம் பேசியதெல்லாம் சும்மா ஒரு வெற்றுத் தகுதிக்காகத்தான்."

சிந்தனைக்காக வேறுபக்கம் செலுத்திக் கொண்டிருந்த தன் பார்வையை அவள் மீண்டும் கோபால் மேல் செலுத்தினாள். அவளது பார்வையில் ஏமாற்றத்தின் சாயல் தோன்றியது என்றாலும், முந்திய திகைப்பும் குழப்பமும் இல்லை அமைதியாகவும் தெளிவாகவும் அவனிடம் பேசத் தொடங்கினாள் "வேலைக்குப் போற பொம்பிளையளில ஆம்பிளையளுக்கு இருக்கிற கொச்சைத்தனமான எண்ணங்கள் உங்களிட்டையும் அப்பிடியே இருக்கு. இதை நான் எதிர்பார்க்கவே இல்லை

அவ்வாறாக அவள் பேசிக்கொண்டுவந்த நிலையில் கோபால் உள்ளுக்குள் வெலவெலத்துப் போனான். "தன் உள்ளத்தைப் பிளந்துபார்த்ததுபோல், அப்பட்டமாய் சொல்லிவிட்டாளே" என்ற எண்ணத்தால அவனுக்கு ஏற்பட்ட வெலவெலப்பு அது. ஆனால், அவள் தொடர்ந்து பேசினாள்.

...... நல்லவேளே; கல்யாணம் முடிஞ்ச பிறகு அதைச்சொல்லி; பிரச்சினையளை உண்டு பண்ணி என்ரை வாழ்க்கையை நாசமாக்காமல் முதல்லயே சொன்னியளே, அதுக்கு நன்றி ஆனு. இதோடைபோதும். எனக்கும் உங்களுக்கும் இடையில இனி எந்த உறவும் தேவையில்லை ''

கோபாலிடம் சொல்லக்கூடியதை எல்லாம் சொல்லி முடித்துவிட்டு, விஜயா எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கினுள் அவளது மனத்தின் தெளிவு நடையிலும் அப்படியே இருந்தது.

# பெண்களே உங்களுக்கு ...

— ஸ்ரீ சுவாமி சிவானந்தா

உலகின் தலைவிதியே உங்கள் கையில்தான் இருக்கிறது. குழந்தையின் ஒழுக்கத்தை உருவாக்குவது நீங்கள்தான் எதிர்கால காந்திஜி, நெப்போலியன், ஷேக்ஸ்பியர்களை நீங்கள் உருவாக்கலாம். எல்லாம் உங்கள் கையில் தான் இருக்கிறது. அதனுல் தான் இந்த நாட்டில் இத்தனை காலம் தர்மம் தழைத்து வந்திருக்கிறது.

குழந்தை ஒன்றினிடத்து ஏற்படும் பதிவுகள் நிரந்தரமானவை மாற்றமுடியாதவை, இளம் பருவத்தில் ஒருவனது குணங்களை உருவாக்கி ஒருவனது கடைசி நிமிடம் வரை இந்தப் பதிவுகள் அவனைத் தொடர்கின்றன. எனவே. ஒரு தாய்க்குள்ள பொறுப்பு மிகப் பெரியது. தொட்டிற் பருவத்து பதிவுகள் பழக்கங்கள், சீரிய ஆன்மீகப் பதிவுகளாக அமைகின்றனவா என்பது குறித்து அவள் கருத்துச் செலுத்தவேண்டும் உண்மையான ஆத்மீகப் பண்பாட்டினைச் செழிப்பான இளம் உள்ளங்களில் தாயானவள் பதிப்பிக்க வேண்டும்.

தாய்மார்கள் வாழ்க்கையின் உண்மைத் தத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும். அவர்கள் தெய்வ நெறியில் நிற்க வேண்டும். அப்பொழுதுதான் தங்கள் குழந்தைகளையும் அவர்கள் நன்நெறியில் செலுத்த முடியும் அப்பொழுது தான் தங்கள் கணவன்மார்களுக்கு உதவியாக இருந்து அவர்களையும் அவர்கள் நல்வழிப்படுத்த முடியும்.

# இது ஒரு புரட்சிக் காலம்!

— ஊரெழு தர்ஷினி

போராட்டமும், புரட்சியுமாய் நாட்கள் ஓடிக் கொண்டிருக்கும் காலம, விடுதலை வேட்கையும், போராட்ட உணர்வும் சொந்தளித்துக் கொண்டிருக்கும் காலம். உலகளாவிய ரீதியில் நாடுக்கு நாடு அடக்குமுறையும், அராஜகமும் தலை நீட்டும் இடமெல்லாம்...... புரட்சி.! போரட்டம்! ...விடுதலை!

இந்நிலையில்:

எமது தேசிய விடுதலைப் போரட்டமும், அரசியல் நிலைப் பாடுகளும் தத்தமது நிலைகளில் பரிணும வளர்ச்சியுடன் திகழ்கின்றது. இத்தகைய தேசிய விடுதலைப் போராட்டமானது ஒரு குறிப்பிட்ட பகுதி மக்களின் வெளிப் பாடாகவோ, அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் எழுச்சியாகவோ இல்லாமல், பரந்த அளவில் பல தரப்பட்ட மக்களின் ஒட்டு மொத்தமான போராட்ட சக்தியாக ஒன்றிணைந்துள்ளது. தனியே இளைஞர்களை உள்ளடக்கிய போராட்டமாக இல்லாமல் மக்கள் போராடடம் என்பதற்கிணங்க சிறுவர்கள், பெரியவர்கள், என்ற பாகு பாடின்றி ஆண்கள் - பெண்கள் என்ற பிரிவினையின்றி அனைவரது பங்களிப்பின் மூலம் மாபெரும் மக்கள் போராட்டமாக இன்று மாறியுள்ளது.

இதில்:

பெண்களின் பங்களிப்பு பாரியளவில் செலுத்தப் பட்டுள்ளது என்பது நாம் அறிந்து கொள்ளக் கூடியதொன்று அரசியல் போராட்டத்தில் இருந்து இன்றைய ஆயுதப் போராட்டம் வரை பெண்களின் பங்கு பெருமளவு அளிக்கப் பட்டுள்ளது. அரசியல் அறிவும், அனுபவமும் கொண்டவர்களாக மட்டுமல்லாது ஆயுதப் பயிற்சியுடன் கூடிய ராணுவமாக பெண்களின் செயற்படும் நிலை முன்னேறியுள்ளது.

அன்று தொட்டு இன்று வரை பெண் போராளிகளின் அரசியல், ஆயுதப் போராட்டமானது உலகளாவிய ரீதியில் பல தரப்பட்ட ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் மிகப் பாரிய அளவில் முன்னெடுத்துச் செல்லப்பட்டு, சர்வதேச ரீதியில் பெண்களின் அரசியல் போராட்டம் தமக்கென்று நிலையான இடத்தை நிறுவியுள்ளது.

❊ இத்தகைய பெண்களின் அரசியல் போராட்டமானது பெண்களிடையே எத்தகைய ரீதியில ஈடுபாட்டையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது?

❊ இத்தகைய போராட்டத்தில் இவர்களை உள்ளாகியது எது?

❊ விடுதலை உணர்வுடன் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இவர்களைத் தூண்டியது எது?

❊ விடுதலை வேட்கையா? போராட்ட உணர்வா? தனிபபட்ட உணர்வு வேகமா? அல்லது இன்ன பின் காரணங்களா?

எமது சமுக நிலையும் குடும்ப வாழ்கை முறையும் எமது பாரம்பரிய பண்பாடு, கலாசாரங்களை உள்ளடக்கியதாக அன்று தொட்டு இன்று வரை காணபபடுகின்றது. இந்த புது யுகத்தில் உலக முன்னேற்றமும், மனித வளர்ச்சியும் எமது வாழ்கை முறைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தை எமக்கு உணர்த்தியுள்ளன.

இந்த நிலையில் எமது பெண்களின் வளர்ச்சியும், முன்னேற்றமும் அளபபரியளவில் கல்வி, தொழில், பொருளாதாரம் உட்பட பல தரப்பட்ட நிலைகளில் உயர்ந்து காணப்படுகின்றது. ஒட்டுமொத்தமாக இந் நிலை பரவலாகக் காணப் பட்டாலும் மாறுபட்ட

சமூக அமைப்பில், ஜாதி வித்தியாச அடிப் படையில், ஏற்ற– தாழ்வு நிலைகளில், கல்வி, தகுதி– அறிவு ஆற்றல் போன்ற ரீதியால், தொழில் சார்ந்த பாகுபாடில் இவை உட்பட இன்னும் பல நிலைகளில் பல வேறுபட்ட பிரச்னைகளை பெண்கள் எதிர்நோக்கியுள்ளார்கள் இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கும் பெண்கள் சமூக குடும்ப ரீதியில் ஒரு வகை அடக்கப்படும் நிலைக்கு உள்ளாக்குகின்றனர். இந்த பொதுவான பிரச்சினைகளை தவிர பெண்கள் சொந்த வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் ஆளாகியுள்ளார்கள். ஆண்களாலும் குடும்ப அங்கத்தவர்களாலும் அடக்கப்படும் நிலை. ஒவ்வாத திருமண நிர்ப்பந்தம், கல்வியைத் தொடரவோ, தொழில் வாய்ப்புப் பெறும் நிலையின்றி விரக்தி நிலை சம கால பிரச்சினைகளால் ஏற்பட்ட உடல்– உள பாதிப்புக்கள் – சமூகத்தில் தனது தனித் தன்மையுடன், ஆளுமையுடன் சுதந்திர கருத்துக்களுடன் திகழ முடியாத நிலை, சீதனப் பிரச்சினை போன்றவற்றால் திருமண வாழ்வில் இணைந்து கொள்ள முடியாத நிலை, இதே போன்ற காரணங்களாலும் பெண்கள் பிரச்சனைகள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் கால கட்டத்திற்கு ஏற்ப விடுதலை உணர்வும் – தேசிய விடுதலைப் போராட்ட எழுச்சியும் எம்மிடை மிக உற்வேகத்துடன் பரவலாக்கப் பெறுமிடத்து எற்கெனவே சமுதாய – குடும்ப ரீதியில் பல் வேறு காரணங்களுக்காக அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு எதிர் நோக்கும் பிரச்சினைகளால் பாதிக்கப் பட்டு வந்த பெண் இனம் தமக்கு சாதகமாக குரல் கொடுக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டது இயற்கையே! இவர்களின் உளளார்த்தமான பாதிப்புகளுக்கு, பிரச்சனைகளுக்கு தீர்வு காணுமிடத்தில் பெண் விடுதலை அமைப்புக்களோ, சங்கங்களோ எதிர்பார்த்தளவு தீர்வு வழங்காது மேலோட்டமாக பெண்கள் பிரச்சனைகளை ஆராய்ந்ததால் முற்றாக இப் பெண்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியாதுள்ளது. இந் நிலையால் முன்னெடுத்துச் செல்லப்படும் இன விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் ஒட்டு மொத்தமாக பெண்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்ற நிலை யதார்த்த மானதே!

ஒரு சுதந்திரமான நாட்டின் விடுதலை தான் சமூக விடுதலைக்கும் அது சார்ந்த பிரச்சனைகளுக்கும் விடுதலை அளிக்கும் என்பது உண்மை! இதே சமயம் இந்த பெண்களின் அரசியல் போராட்டமானது பெண்களின் பாதிப்புகளையோ பிரச்சினைகளையோ மட்டும் வைத்து உருவாகியதல்ல என்றும் அடிப்படையாக இன அடக்கு முறையும் அரசியல் சூழ்நிலைகளும் கிளர்ந்தெழுந்த போராட்ட கால நிலையின் காரணமா என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இன விடுதலைக்கான அடிப்படை ஈடுபாட்டுடன் பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

மேலைத்தேய பெண்களின் பெண் விடுதலைப் போராட்டத்திற்கும், நமது பெண் விடுதலைப் போராட்டத்திற்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் உண்டு. அவற்றுடன் நமதை ஒப்பிடுதல் ஆகாது. எனவே எமது நிலையில் நாம் எம் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் கடமைக்கு ஆளாகியுள்ளோம்.

எனவே சமூக பாதிப்புகளாலும், தனிப்பட்ட பாதிப்புகளாலும் சூழப் பட்ட பெண் இனம் அதற்கான உறுதியான, நிலையான தீர்வு வேண்டியும் தேசிய இன விடுதலை வேண்டியும் போராடும் இக் கால கட்டத்தில் இந்த தேசிய இன விடுதலைப் போராட்டம் நிச்சயம் பெண்கள் பிரச்சினைகளையும், அவர்களின் அபிலாசைகளையும் நம்பிக்கையுடன் தீர்த்து வைக்க வேண்டும் என்பது யாவரினதும் எதிர்பார்ப்பு மட்டுமல்ல. இத்தகைய ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்பது அவசியமும் கடமையும் கூட.

சிறுகதை

# புதிய சுவடுகள்

தாரகா டானியல்

பிரியா மெல்லக் கண் விழித்தாள் எங்கும் ஒரே இருளாய் இருந்தது. அவளுக்கு அது என்ன நேரம் என்றே மட்டுக்கட்ட முடியவில்லை தலையெல்லாம் விண் விண் என்று வலித்தது எழுந்து விளக்குகளைப் போட வேண்டும் என்ற எண்ணம் அவளினுள் ஏற்பட்டாலும் கால்கள் ஏனோ கட்டிலை விட்டு எழுந்து விட மறுத்தன அவள் யோசித்தாள். இப்போது என்ன மணி இருக்கும்......

அப்பாவின் தொணதொணப்பு திடீரென ஆரம்பித்தது. ஓ! அதுதான் நடந்துமுடிந்து விட்டதே பின்னர் ஏன் இந்த அப்பா கத்துகிறார். அவளுக்கு திடீரென தன்னை நினைக்கவே சினம் சினமாய் வந்தது கண்ணீர் ஆறாகப்பெருக அவள் படுக்கையிலே புரண்டாள் அந்தக் கண்ணீரோடே அவள் நினைவுகளும் முன்நோக்கிச் சென்றன.

அப்போது பிரியா A/L படித்துக் கொண்டிருந்தாள்

தான் ஒரே தடவையிலேயே பல்கலைக்கழகம் புகுந்துவிட வேண்டும் என்ற ஆவலினாலேயே அவள் மிகுதியாகப் படித்துக் கொண்டிருந்தாள். அந்த வகுப்பில் எத்தனையோ மாணவிகள் இருந்தும் பிரியா எல்லா அம்சங்களிலும் சிறந்து விளங்கினாள். படிப்பது விஞ்ஞானமாய் இருந்தும் கலையிலும் இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தாள். பார்ப்போர் எல்லோரும் அவளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் உண்டென்பதையே உறுதிசெய்தனர் பிரியாவின் குடும்பமோ பரம்பரைப்புகழ்மிக்கது யாழ்ப்பாணத்திலேயே முதலியார் என்றால் தெரியாதவர் எவருமில்லை. அந்தளவிற்கு பேர்போன முதலியாரின் பேரனே பிரியாவின் தந்தை பரமசிவம். ஆரம்பத்தில் செல்வவளம் மிக்கதாய் இருந்த பிரியாவின் குடும்பம் காலப் போக்கில் செல்வமிழந்து வறுமை நிலைப்பட்டது இந் நிலையிலும் தான் நன்றாகப் படித்து முன்னேற வேண்டுமென பிரியா ஆர்வத்துடன் A/L பரீட்சை செய்து சித்தியடைந்தாள். பல்கலைக்கழகத்திற்கும் தெரிவு செய்யப்பட்டாள் ஆனால் ஒரு நாள் தந்தை திடுதிப் என ஒரு குண்டைத்தூக்கிப் போட்டார் ''பிரியா நீ இனிப் படிக்கத் தேவையில்லை உனக்கொரு அருமையான இடம் பேசி வந்திருக்கு''

''அப்பா என்ன நீங்கள் இப்ப எனக்கு கலியாணம் வேண்டாம். படிப்பு முடியட்டும்''

''இல்லையம்மா அவன் சாதாரண ஆளில்லை கடமபற்ற பேரன், நிறையச் சொத்துக்காரன். பொடியன் படிக்கேல்லை எண்டாலும் சொக்கத் தங்கம். ஆஸ்தியோட இப்படி ஒரு மாப்பிள்ளை தவம் செய்தாலும் கிடைக்காது நீ மறுப்புச் சொல்லாதை'' பிரியா தத்தளித்தாள். தான் படிக்க வேண்டுமென்று ஒற்றைக்காலில் நின்றாள். ஆனால் அவளது அருமைத் தாயும் ''படிச்சு பொம்பிளை என்ன கிழிக்கப்போறாய் ஓமெண்டு சொல்லு'' அவள் வற்புறுத்தப்பட்டாள். பிரியா தன் தாய் தந்தையருக்காக தன் கனவுகளை தூக்கி ஒரு மூலையில் போட்டாள். திருமதி பசுபதி ஆனாள்.

காலம் உருண்டோடுகிறது. தனது கணவன் பசுபதி தனது அழகிற்கேற்றவனாக இருக்காவிட்டாலும் பிரியா தன்னைத் திருப்திபடுத்திக் கொண்டாள். அவர் படிக்கவில்லை என்றால் என்ன அவரிடம் குணம் இருக்கின்றது என அகமகிழ்ந்தாள். அவள் குடும்பம் என்னும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தாள் வாழ்க்கையில் எவ்விதக் கவலைகளும் தனக்கில்லை என பெருமிதம் அடைந்தாள், ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பதற்கிணங்க ஆரம்பத்தில் மகிழ்வு சூழ்ந்த அவள் வாழ்வு, சிறிது சிறிதாக கலக்கமடைந்தது.

ஒரு நாள்...... கிணிங் கிணிங் தபால்காரன்.

பிரியா ஓடிச் சென்றாள். திருமதி. பிரியாவிற்கு அழகான முத்து முத்து எழுத்துக்களில் விலாசம் எழுதப்பட்டிருந்தது. உடனே பிரித்தாள் அன்புள்ள பிரியா, நான் A/L இல் நன்கு தேறியதை முன்னிட்டு 19.4.86 இல் அதாவது செவ்வாய்க்கிழமை எனது வீட்டில் ஒரு விருந்து உபசாரத்தை நடாத்த உள்ளேன், அவசியம் வரவும்.

இப்படிக்கு
அன்பு மறவா
அரவிந்த்

"என்ன அது யார்ரை லெற்றர்?" கேள்வி சாதாரணமாய் அவரிடமிருந்து வந்தது.

அது என்ர பள்ளிக்கூட பிரெண்ட் அரவிந்த போட்டிருக்கிறார். செவ்வாய்க்கிழமை அவற்றை வீட்டை றிசல்ஸ்க்கு பார்ட்டியாம் என்னை வரட்டாம்.

''ஓ! உனக்கு ஆம்பிளை நண்பரும் இருக்கினமே?'' ஏளனமாய் அவர் குரல் ஒலித்தது ''இன்னும் எத்தின பேரின்ரை கடிதம் வரப்போகுதோ'' அவள் ஒரு கணம் நிலைகுலைந்து போனாள். நீங்கள் இவ்வளவு சந்தேகப்பிராணியாக இருப்பியள் என்று நான் நினைக்கேல்லை உங்களுக்கு யதார்த்தமா யோசிக்க ஏலாதா உங்கட ஒரு சொல்லே உங்கட நிலைப்பாட்டைக் காட்டுது'' சூடாக வார்த்தைகள் பறந்தன அவளிடமிருந்து ''ஓ! படிச்ச திமிர் பொத்தடி வாயை'' முதலாவது பிரளயம் அன்று ஆரம்பமானது. பிரளயம் தொடங்கியது மட்டுமன்றி, தொடரவும் செய்தது. ஆரம்பத்தில் அவரைப்பற்றிப் புரிந்து கொள்ளாமல் தலையை நீட்டி விட்டோமே என்று அவள் நித்தமும் அழுதாள். யாராவது ஆண் இவளைப் பார்த்ததும் புன்னகை செய்தாலும் மிரண்டு விடும் அளவிற்கு பசுபதிக்கு தான் அழகில்லை என்ற தாழ்வு மனப்பான்மை இருந்தது. நாளும் நாளும் அடியும் உதையுமாக அப்பப்பா...... இவற்றுக் கெல்லாம் உச்சக்கட்டமாக ஒன்று நிகழ்ந்தது.

அன்று கவிதா பிரியாவிடம் வந்திருந்தாள் கவிதா பிரியாவுடன் ஒன்றாகப்படித்தவள் அப்போது அவள் ஒரு பிரபல ஹோட்டலில் வரவேற்புப் பெண்ணாகப், பணியாற்றிக் கொண்டிருந்தாள். அவள் வந்தது தான் வந்தாள். சும்மா வரவில்லை இடியோடு வந்தாள்.

''பிரியா நான் ஒண்டு உனக்கு சொல்லுவேன் நீ என்னைப் பேசக்கூடாது.''

''ஏன் என்ன விசயம்''

''இல்லை உன்ர அவர் எப்படி?'' ''ஏன் அவருக் கென்ன?''

அவர் இரவில வீட்டுக்கு வருவதில்லை என்பது இவளுக்கு எபபடித் தெரியும்.

''உன்ரை அவரும் ஒரு பொம்பிளையும் எங்கட கோட்டல்ல தான் ரூம் எடுத்து தங்கிறவை நான் பொய்சொல்லத் தேவையில்லை என்னாலை நிரூபிக்கவும் முடியும்'' என்று கூறி தன் கையோடு வைத்திருந்த பசிதுகளைக் காட்டினாள்,

''ஓ! இந்த மனுஷன். தான் அப்படி நடந்து கொண்டா, என்னை அப்படி எல்லாம் கீழ்த்தரமாகப் பேசினார்.'' அவள் செயலற்று சிலை போல் அமர்ந்திருந்தாள் கவிதா போய் விட்டாள்.

— ० —

அவள் மறுபடியும் கண் விழித்த போது எதிரே பசுபதி சிம்மம் போல் நின்றிருந்தார்.

''இருண்ட வீட்டுக்கு விளக்கேற்றாம ஆரைபபற்றி யோசிக்கிறாய்.''

அவள் நிமிர்ந்தாள். அந்த நேரத்தில் அவரைப் பார்த்து ஒரு புழுவிலும் கீழ்த்தரமாய் மதித்தாள்.

''உங்கட அவளைப்பற்றித்தான் யோசிக்கிறேன். சீ! நீங்களும் ஒரு மனுசனா!''

''என்னடி சொன்னாய்! அழிமூஞ்சி நாயே! ஓமடி உன்னை விடத்தான் போறன். போடி வெளியால நான் ஆரோடையும் போவன் நீ என்ன கேக்கிறது'' பிரியா அடிபட்ட புலி போல் உறுமினாள்.

''ஓம் போறேன். இனி உங்களோட வாழ மாட்டன்'' அன்றிரவே அவருக்கும் அவளுக்கும் இருந்த உறவு முறிந்தது.

— ● —

சிறிது காலத்தின் பின் விவாகரத்துக்கோரி மனுவந்தது. அவள் கையெழுத்திட்டாள் சட்டப்பிரகாரம் அவள் தன் பெயருக்கு முன்னுல் திருமதியை வெட்டிக்கொண்டாள் இன்று அவள் செல்வி பிரியா. ஒரு வாழா வெட்டி. எரிமலைகள் எபபோதும் வெளிவருவதில்லை அது எப்போதோ ஒரு தடவைதான் வெளிவரும். அதே போலத்தான் பிரியாவும் நடந்து கொண்டாள். விவாகரத்து முடிந்த மறு மாதமே பசுபதி இன்னொருத்தியை மணந்து கொண்டார். பிரியா துடித்தாள் தனது வாழ்க்கை இனிப்போய் விட்டதா என ஏங்கினுள்.

இந் நிலையில் தான் அவள் முகுந்தனைச் சந்தித்தாள். முகுந்தனை அவள் படிப்பிக்கப் போகும் நர்சரிக்கு போகும் வழியில் தினமும் காண்பாள். அவனும் இவளைப் பார்த்து புன்னகை புரிவான. அப்புன்னகை பின்பு நட்பு ஆகி, அன்பாகி இறுகியது புண்பட்ட நெஞ்சததிற்கு முகுந்தனின் உறவு இதமாக இருநதது. இருவரும் மணமுடிக்க விரும்பினர் முகுந்தன் சம்பிரதாய பூர்வமாக பிரியாவின் தந்தையிடம் சம்பந்தம் பேசி வந்தான்.

''நான் உங்கட மகள் பிரியாவை விரும்பிறன் அவளைகலியாணம் செய்யவேணுமெண்டு நினைக்கிறன்'' ''தம்பி உம்மட விருப்பத்திற்கு நான் தடை சொல்ல மாட்டேன் தம்பி என்ர மகள் வாழ வேண்டுமெண்டுதான் நானும் விரும்பிறன். அவளை ஏமாத்தின அவனுக்கு முன்னுல அவள் வாழ்ந்து காட்டத்தான் வேணும் உமக்கு அவவின்ரை விபரங்கள தெரியும் தானே?''

'ஓம் தெரியும், அவவுக்கு ஆறுதலாக நான் இருக்க விரும்பிறன்.''

''நல்லதுதம்பி, ஆர்ர மகன்'' சம்பிரதாய விசாரிப்புத் தொடங்குகிறது.''

''நல்ல தம்பியற்ற மகன்'' ''ஆர் புன்னுல நல்ல தம்பியின்ர மகனே?''

''ஓம் அவர் தான் என்ரை அப்பா,''

''உம்மட அப்பாதானே கான்சர் வந்து செத்தது?''

''ஆம் அவர் தான்''

''ஒமோம் உமக்கும் ஒரு எண்ணமோ கோவியன், உமக்கு எங்களோட சம்பந்தம் கேக்குதே, போடா வெளியில என்ர மகள் வாழமாட்டியும் பரவாயில்லை உனக்கு அவளைத் தரமாட்டன்''

''ஐயா நான் சொல்லுறதைக் கேளுங்கோ''

''நான் ஒண்டும் கேக்கேல்ல போடா வெளியில'' முகுந்தன் சீறினுன். ''உங்கட பழைய வேதாந்தங்களை நீங்களே பேசிககொண்டிருங்கோ, உங்கட மகளைச் சீரளியுங்கோ''

அவன் போய்விட்டான். எல்லாம் ஒரு சொற்ப நேரத்தில் முடிந்துவிட்டது.

— ● —

பிரியா உற்றுக் கேட்டாள் அப்பா அம்மாவிடம் ''எளிய ராஸ்கல்' என்ர மகளைக் கேக்கிறுர், என்னை யாரண்டு நினைச்சார் பொறுக்கி''

பிரியாவின் உதடுகள் துடித்தன. கால்கள் படபடத்தன. எழுந்தாள், இருளைக் கடந்து வெளிச்சத்திற்கு வந்தாள். ''அபபா''

''என்னம்மா நீ கவலைப்படாத உனக்கு வேறை ஆளைப்பாபபம்''

''இல்லை நான் அவரோடதான் வாழப் போறன்''

''என்ன உனக்கென்ன விசரோ அவன் குறைஞ்ச சாதிப்பயல்''

''மூடுங்கோ வாயை குறைஞ்ச சாதி குறைஞ்ச சாதியெண்டு சொல்லுற நீங்கள் ஒரு நல்ல சாதியைத்தான் எனக்குக் கட்டி வைச்சியள். ஆனுல் அந்த நல்ல சாதி தன்ரை இழிவான குணத்தைக் காட்டிற்றுது. அது

உங்களுக்குத் திருப்தி. சாதி எண்டது குணத்திலதான் இருக்கு குலத்தில் இல்லை''

"பொத்தடி வாயை! உனக்கும் அந்த எளிய புத்தி வந்திட்டுது''

''என்ர வாழ்க்கை முதல்தரம் உங்களுக்காக, உங்கட கௌரவத்துக்காக, வறட்டுச் சிந்தனைகளுக்காக இழந்தன். இனியும் அப்பிடி இருக்க மாட்டன் என்ரை வாழ்க்கையை நான்தான் முடிவு செய்வன்.''

''அப்ப என்னதான் சொல்லுறாய்''

"நான் அவரைத்தான் கட்டப்போறன், வாழப்போறன்''

''அப்படிச் செய்தால் நானும் அம்மாவும் சாவம்''

''சாவுங்கோ உங்களோட அந்த வறட்டு எண்ணங்களும் சாகட்டும்''

பிரியா நிமிர்ந்து ஆகாயத்தைப் பார்த்தாள், வானில் தாரகைகள் மின்னின. அவள் நிர்மலமான அந்த வானத்தை கூர்ந்து பார்த்தாள் திடீரென முற்றத்தில் இறங்கினாள்.

அவளது சுவடுகள் இனி அவள் வாழ்க்கைப் பயணத்தில் ஆழமாய் பதியும்.

---

## உலா

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் இரு கருத்தரங்குகளையும் அதனைத் தொடர்ந்து ஓர் பெரும் பெண்கள் எழுச்சி. மாநாட்டினையும் ஒழுங்கு செய்து நடத்தியது, அடிமட்ட அபிவிருத்தியினை வேண்டி நிற்கும் பகுதிகளை மையப்படுத்தி நடத்தப்படும் எமது நிகழ்ச்சிகள் இம்முறை பாஷையூர் குருநகர் கொய்யாத் தோட்டப் பகுதிகளில் இடம் பெற்றமையைச் சிறப்பாகக் குறிப்பிடுதல் பொருத்தம்.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் இப் பகுதிகள் அமைந்திருந்த போதிலும் இவை பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இப்பகுதியில் மகளிர் அபிவிருத்தி நிலையம் மேற் கொண்டதோர் ஆய்வின் முடிவாக சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக பல தேவைகளை இனங்காண முடிந்தது பெரும் பான்மையாக, மீன் பிடித் தொழில் பிரதானமாகக் கொண்ட இம் மக்கள் பலாது பொருளாதார நிலைகள் பின்தங்கியே காணப்பட்டன. புகழ் பெற்ற பல சிறந்த பாடசாலைகள் இப்பகுதியின் பின்னணியில் அமைந்திருந்த போதிலும் இப் பகுதிவாழ் பெண்களின் கல்வி முன்னேற்றத்தில் அப் பாடசாலைகளின் பங்கு குறைவாகவே காணப்பட்டது.

ஆகவே இப்பகுதியில் வாழ் பெண்களிடையே ஆழமானதோர் விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்துவது மிக மிக அவசியம் என்ற எண்ணத்தில் எம்து நிலையத்தினால் சில கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து சிறப்பாக நடத்த முடிந்தது. கொய்யாத் தோட்டம், குருநகர், பாஷையூர் ஆகிய இடங்களில். மார்ச் 1990 ல் நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் சர்வதேச மகளிர் தினத்தின் முக்கியத்துவம், பெண்கள் அபிவிருத்தித் தேவைகள், நாம் எடுத்துச் செல்ல விருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப் பட்டதுடன் பெண்களின் தலைமைத்துவத்தின, முக்கியம் பற்றிய விடயங்களும் ஆராயப் பட்டன.

[தொடரும்]

நங்கை

# நோயற்ற வாழ்வு

டாக்டர் பதில்

## நல் வாழ்வுக்கான அதி உயர்ந்த அறிவுரைகள்

1. பதினெட்டு வயதிற்கு முன் கர்ப்பம் தரிப்பதனைத் தவிர்த்தல், பிரசவத்தினை நான்காகாகக் கட்டுப்படுத்துதல், பிறப்புகளுக்கிடையே இருவருட கால இடைவெளியினை ஏற்படுத்துதல் மூலம் பெண்களினதும் சிறுவர்களதும் சுகாதாரத்தைக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மேம்படுத்தலாம்.

2. கர்ப்பமாக உள்ள காலத்திலேற்படும் அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்கு சகல கர்ப்பிணிப் பெண்களும் பேறு காலத்திற்கு முந்திய கவனிப்பிற்காக சுகாதார அலுவலரை அணுக வேண்டும். அத்துடன் சகல பிரசவங்களும் பயிற்றப்பட்ட ஒருவரின் துணையுடன் இடம் பெறுதலும் அவசியம்.

3. குழந்தை பிறந்து முதற் சில மாதங்கட்கு தாய்ப்பால் மட்டுமே சிறந்த உணவும் பானமுமாகும். குழந்தைகட்கு தாய்ப் பாலுடன் மேலதிகமாக வேறு உணவு ஊட்டுதல், நான்கு தொடக்கம் ஆறுமாத காலத்தின் பின்பே தேவையானதாகும்.

தொகுப்பு : பேராசிரியர் (திருமதி) ரி. சரவணபவானந்தன்,

---

**உலா....**

(39ஆம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச் 7ம் திகதி பாஷையூர் றோ. க. பாடசாலையில் ஓர் பெண்கள் எழுச்சி மாநாடு இடம்பெற்றது. இம்மாநாட்டை செல்வி திலகவதி பெரியதம்பி, (வடமாகாண கல்விப் பணிப்பாளர்) ஆரம்பித்துவைத்து, ஆரம்ப உரை நிகழ்த்தி எம்மை ஊக்கப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மாநாட்டில் பிரதம பேச்சாளர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி குணேஷ் பரராசசிங்கம், மனித முன்னேற்ற நிலைய நிர்வாக செயலாளர் சகோதரி திரேசியா, மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் சரோஜா சிவச்சந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக மென்விரல்கள், பேய் காக்கும் வீடு ஆகிய இரு வீடியோ படங்கள் காட்டப்பட்டன. பெண்கள் வேலைத்தலங்களில் படும் துன்பங்களையும் இன்னல்களையும் 'மென்விரல்கள்' எனும் விபரணப் படம் தெளிவுறுத்தியது. 'பேய் காக்கும் வீடு' சிங்களக் கிராமம் ஒன்றில் நடந்த உண்மைச் கதையாகும். அணுநிக்கத்தால் இன்னலுறும் ஒரு குடும்பப்பெண்ணின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத சமூகம் அவளைப் பேய் பிடித்தவளாக்கிக் கடைசியில் கொன்றுவிடுகிறது. இவ்விரு படங்களும் விழாவிற்கு வந்திருந்தோரின் பாராட்டுக்களைப் பெற்றன. அத்துடன் எம்மைக் சூழவுள்ள பெண்களின் இன்னல்களைப்பற்றிய படங்களை நாம் தயாரித்தளிக்க வேண்டுமென்ற உந்துதலையும் அளித்தன.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

ஓர் நற்செய்தி

நீலந்தோய்க்கும் சிரமம் வேண்டாம்

சிறந்த, சிரமமில்லாத, சிக்கனமானவழி
நீலங்கலந்த, நுரைவளம்மிக்க

"மில்க்வைற்"

நீலசோப்பினைப் பாவிப்பதால் சலவை சுலபமாகிறது.
மில்க்வைற் நீலசோப் மேலுறையிலிருந்து 500 திருக்குறள் அனுப்பி
நங்கையர் கைவண்ணத்தில் உருவான ''துவாய்''
ஒன்றினை உங்களுடையதாக்குங்கள்

# "மில்க்வைற்"

யாழ்ப்பாணம்.

இறக்குமதி செய்யப்பட்ட

சகலவிதமான உணவுப் பொருட்களுக்குத்
தேவையான
இரசாயனம், கலர், எசன்ஸ்
மற்றும்
பலசரக்கு, பேப்பர்

யாழ் நகரில் அதி சிறந்த ஸ்தாபனம்

**பெட்டா**
**எசன்ஸ் சப்பிளையர்ஸ்**
223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான தங்க வைர நகைகளுக்கு

அதி நவீன டிசையினில்
பெற்றுக்கொள்ள
யாழ் நகரில்

**செல்லையாசிவபாதலிங்கம்**
**( நகை மாளிகை )**

189 A, 218 H கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Phone: **23794**

*With the Best Compliments*

*of*

# COMMERCIAL BANK OF CEYLON LIMITED

474, Hospital Road,

Jaffna.

**Tel : 22176**

TELEGRAPHIC ADDRESS :- **"COMBANK"**

— **The Bank to Grow with** —